# 6. ஐந்தாம் சார்லஸ்

ஐரோப்பிய வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய பேரரசர் ஐந்தாம் சார்லஸ் ஆவார். இவர் 1516-ல் முதலாம் சார்லஸ் என்ற பெயரில் ஸ்பானிய அரசரானார். 1519-ல் புனித ரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்தாம் சார்லஸ் என்ற பெயரில் ஒரு பெரிய பேரரசை ஆட்சி செய்யும் பொறுப்பை ஏற்றார். சார்லிமென் காலத்திற்குப் பிறகு நமக்குத் தெரிந்த பேரரசுகளில் மிகப்பரந்த பேரரசை ஆண்டு வந்தவர் இவர். ஐரோப்பிய வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் பேரரசரானார் சார்லஸ். சமயச் சீர்திருத்தம், ஸ்பெயின்-பிரான்ஸ் ஆதிக்கப்போட்டி, இத்தாலியப் போர்கள், துருக்கியர் தொல்லைகள் ஆகிய சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் நீண்ட நாட்கள் அரசாண்டார். இவரது ஆற்றல் எல்லாம் போர்புரிவதிலும், ஐக்கியமோ ஒற்றுமையோ இல்லாத ஒரு பேரரசை நிர்வகிப்பதிலும் கழிந்தது. இருப்பினும் எல்லா சிக்கல்களையும் இயன்ற அளவு சமாளித்தார். பதினாறாம் நூற்றாண்டின் முன்பகுதி ஐரோப்பிய வரலாறு ஐந்தாம் சார்லஸின் வரலாறேயாகும்!

## ஐந்தாம் சார்லஸின் பூர்வீக வரலாறு :

பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலேயே பலம்பொருந்திய நாடாக விளங்கியது ஸ்பெயின் இதற்கு முக்கியக் காரணம் வலிமையும் ஆற்றலும் மிகுந்த தரைப்படையும் கப்பற்படையும் ஸ்பெயின் பெற்றிருந்தது ஆகும். இதனை உருவாக்கியவர்கள் பெர்டினாண்ட் இசபெல்லா என்ற ஸ்பானிய அரச தம்பதிகள் ஆவர். மேலும் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதின் விளைவாகவும், மேற்கு இந்தியத் தீவுகள், பெரு, மெக்ஸிகோ ஆகிய நாடுகளுடன் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பின் காரணமாகவும் ஸ்பெயினின் செல்வம் பெருகியது. ஸ்பானியத் துறைமுகங்களில் செல்வம் கொழித்தன. இவையெல்லாவற்றையும் விட பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 1469-ல் காஸ்டைல் அரசி இசபெல்லாவுக்கும் (Isabella of Castile) அரகான் அரசர் பெர்டினாண்டுவிற்கும் (Ferdinand of Aragon) இடையே ஏற்பட்ட திருமணம் தான் ஐக்கிய ஸ்பானிய அரசு தோன்றி வலிமை பெறுவதற்குக் காரணம் ஆகும்.

புகழ்பெற்ற இந்த அரசதம்பதிகளின் திருமணம் ஐரோப்பிய வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. பெர்டினாண்டுக்கும் இசபெல்லாவிற்கும் மூன்று பெண்கள் இருந்தனர். ஸ்பெயினின் செல்வாக்கு ஐரோப்பாவெங்கும் பரவவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மூன்று இளவரசிகளின் திருமணமும் ஏற்பாடு செய்யப்பட்டது. மூத்த மகளான ஜோனா (Joanna) புனிதரோமானியப்

பேரரசரான முதலாம் மேக்ஸிமிலியனின் மகனான ஹாப்ஸ்பர்க் குடும்ப இளவரசன் பிலிப்பை மணந்தார். இரண்டாவது மகளான மரியா (Maria) போர்ச்சுக்கல் அரசரான முதலாம் இமானுவேலை (Emmanuel-I 1495 -1521) மணந்தார். மூன்றாவது மகளான காத்தரின் இங்கிலாந்து அரசரான எட்டாம் ஹென்றியை மணந்தார். இந்த சிறப்புமிக்க திருமணங்களால் பெர்டினாண்டு இசபெல்லா தம்பதியினர் பெரும்புகழ் அடைந்தனர்.

இந்த தம்பதியரின் மூத்தமகளான ஜோனாவிற்கும் பிலிப்பிற்கும் கி.பி.1500-ல் மகனாகப் பிறந்தவர்தான் வரலாற்றில் பெரும்புகழ் பெற்ற நமது ஐந்தாம் சார்லஸ் ஆவார்.

## ஸ்பானிய அரசராக சார்லஸ் :

1504-ம் ஆண்டு இசபெல்லா இறக்கவே அவரது நேரடி வாரிசான மூத்தமகள் ஜோனா தனது தந்தை பெர்டினாண்டுடன் ஸ்பானிய அரியணைக்கு உரிமை பெற்றார். 1506-ல் சார்லஸின் தந்தை முதலாம் பிலிப் இறந்ததால் அவரது நெதர்லாந்து அரசு சார்லசுக்குச் சொந்தமானது. 1516-ல் சார்லசின் தாத்தா பெர்டினாண்டும் (அம்மா வழி) இறந்து விடவே ஸ்பானிய அரசும் அதைச்சேர்ந்த பகுதிகளான இத்தாலியிலுள்ள நேப்பிள்ஸ், சிசிலி, சார்டீனியா, அமெரிக்கக் குடியேற்றங்கள் ஆகியவை இவருக்குக் கிடைத்தன. 1519-ல் தனது தந்தை வழி தாத்தா மாக்ஸிமிலியன் இறந்ததால் ஆஸ்திரியா உட்பட ஹாப்ஸ்பர்க் அரசுரிமைகள் அனைத்தையும் பெற்றார். இவ்வாறு தனது 19-ம் வயதில் இதுவரை எந்த கிறிஸ்தவ மன்னரும் ஆண்டிராத பெரிய நிலப்பரப்பிற்கு அரசரானார். 1516-ல் ஸ்பானிய அரசபொறுப்பை ஏற்றுக்கொண்ட முதலாம் சார்லஸ் பொறுமையுடனும் விழிப்புடனும் செயல்பட்டார். தனது குறிக்கோளை எப்படியும் அடைய வேண்டும் என்ற பிடிவாத குணம் கொண்டிருந்தார். ஒரு பரந்த பேரரசின் தலைவராக இருந்தாலும் அமைதியுடனும், தன்னடக்கத்துடனும் ஆட்சி புரிந்தார். தனது இளமைப் பருவத்திலிருந்தே கத்தோலிக்க சமயத்தில் தீவிரப் பற்றுக் கொண்டிருந்தார்.

## சார்லஸ் புனித ரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்படுதல் :

1519-ல் புனித ரோமானியப் பேரரசர் மாக்ஸிமிலியன் இறந்தபின், ஹாப்ஸ்பர்க் அரச உரிமைகளைப் பெற்ற சார்லஸ் புனித ரோமானியப் பேரரசராகவும் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புகள் பெற்றிருந்தார். 1438-ம் ஆண்டு முதல் ஹாப்ஸ்பர்க் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பேரரசராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர் இந்தப் பேரரசர் ஏழு ஜெர்மானிய இளவரசர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்களுள் நான்குபேர் ஆட்சிபுரியும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற மூவரும் சமயப் பிரிவைச் சேர்ந்தவர்கள்

இவர்கள் **தேர்வாளர்கள்** (electors) எனப்பட்டார்கள்.

1519-ல் புனித ரோமானியப் பேரரசர் பதவிக்கு, ஸ்பானிய அரசர் முதலாம் சார்லஸ், பிரான்ஸ் நாட்டு மன்னர் முதலாம் பிரான்சிஸ், இங்கிலாந்து மன்னர் எட்டாம் ஹென்றி ஆகியோர் போட்டியிட்டனர். ஆனால் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு சார்லசுக்கே அதிகமிருந்தது. இறுதியில் ஸ்பானிய மன்னர் முதலாம் சார்லஸ் புனித ரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1520-ல் ஏலாசாப்பேல் என்ற இடத்தில் ஐந்தாம் சார்லஸ் என்ற பெயருடன் பட்டம் சூட்டிக் கொண்டார்.

## ஐந்தாம் சார்லசின் வம்சாவழிப் பேரரசின் பிரச்சனைகள் :

சார்லசின் வம்சாவழிப் பேரரசு (Dynastic Empire) ஐரோப்பாவிலும் அதற்கப்பாலும் சிதறிக்கிடந்தன. இவர் வேறு எந்த பேரரசரும் இதுவரை எதிர்நோக்காத பல பிரச்சனைகளை எதிர்நோக்கினார். ஒரு கட்டுக் கோப்பான மைய அதிகாரத்திற்குட்பட்ட ஒரு அரசாக இல்லாமல் பல தனிப்பட்ட சுதந்திர அரசுகளின் தொகுப்பாகவே இருந்தது. இவரது பேரரசின் பகுதிகளான காஸ்டைல், நெதர்லாந்து, ஸ்பெயின், ஆஸ்திரியா, இத்தாலி, ஜெர்மனி ஆகியவை மொழி, இனம், அரசியலமைப்பு, சட்டம் முதலியவற்றில் ஒன்றோடு ஒன்று முரண்பட்ட தன்மையைக் கொண்டதாக விளங்கின. இப்படிப்பட்ட அரசுகளை ஒன்றுபடுத்தி அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதுதான் இவரது முக்கியமான பணியாக இருந்தது. இப்படிப்பட்ட ஒரு பேரரசை ஆளுவதைவிட ஒரு கடினமான வேலை ஏதும் கிடையாது. இவற்றுடன் ஜெர்மனியில் புரட்டஸ்தாந்து சமயம் தோன்றியதன் விளைவாக ஏற்பட்ட பிரச்சனைகளையும், சிக்கல்களையும் எதிர்நோக்க வேண்டியதிருந்தது. இந்தப் பரந்த பேரரசு சார்லசுக்குப் புகழையும், பெருமையையும் அளித்திருக்கலாம். ஆனால் நிம்மதி, ஓய்வு, மகிழ்ச்சி எதையும் அளித்திருக்க முடியாது.

## 1. பிரான்சுடன் போர் : (இத்தாலியப் போர்களின் தொடர்ச்சி)

ஐந்தாம் சார்லஸ் தனது ஆட்சிக்காலத்தின் பெரும் பகுதியை பிரான்சுடன் போர் செய்வதிலேயே கழித்தார். நெடுநாட்களாகவே பிரெஞ்சு அரச குடும்பத்தினருக்கும் ஸ்பானிய அரச குடும்பத்துக்குமிடையே பகைமை இருந்து வந்தது. ஐந்தாம் சார்லஸ் பதவிக்கு வந்தபின் போர் ஏற்படுவதற்கான உடனடியான பல காரணங்கள் இருந்தன.

1. 1504-ல் பிரெஞ்சு அரசர் பன்னிரெண்டாம் லூயியால், ஸ்பெயினுக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட நேப்பிள்ஸ் மீது இப்போது முதலாம் பிரான்சிஸ் மீண்டும் உரிமை கோரினார்.

2. 1512-ல் 12-ம் லூயி இழந்த மிலான் நகரை 1516-ல் மீண்டும்

கைப்பற்றினார் முதலாம் பிரான்சிஸ். இந்த நகரம் புனித ரோமானியப் பேரரசின் ஒரு பகுதி என்று சார்லஸ் வாதிட்டு அதை மீட்க உறுதிபூண்டார்.

3. ஸ்பெயினால் இணைத்துக் கொள்ளப்பட்ட நவாரே அரசுமீது பிரான்சிஸ் உரிமை கொண்டாடினார்.

4. செல்வம் கொழித்த நெதர்லாந்து மீது தன் ஆதிக்கத்தைப் பரப்ப விரும்பினார் பிரான்சிஸ். இதைத் தடுக்க முடிவு செய்தார் சார்லஸ். அத்துடன் தனது பாட்டனார் காலத்தில் பிரான்ஸ் அபகரித்துக் கொண்ட பர்கண்டியை மீண்டும் பெற விரும்பினார்.

5. எல்லாவற்றையும் விட, 1519-ல் புனித ரோமானியப் பேரரசர் தேர்தலில் ஸ்பானிய மன்னர் சார்லஸ் வென்று, பிரெஞ்சு மன்னர் பிரான்சிஸ் தோற்றது பகையை மேலும் வளர்த்தது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஏராளமான பகுதிகளைப் பெற்றிருந்த சார்லசைக் கண்டு அச்சமும், பொறாமையும் கொண்டார் பிரான்சிஸ். எனவே சார்லஸின் வலிமையை அழித்து பிரான்சின் ஆதிக்கத்தை வலுப்படுத்த விரும்பினார்.

1522-ம் வருடம் தொடங்கிய இப்போர் முதலாம் பிரான்சிஸ் ஐந்தாம் சார்லஸ் ஆகியோர் ஆட்சிக்காலம் முழுவதும் அதற்குப் பிறகும் தொடர்ந்து நடந்தது.

## போரின் போக்கு :

போர் 1522-ல் ஆரம்பமானது. போர் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இத்தாலியில் நடைபெற்றன. போரின் முதற்கட்டமாக போப்பாண்டவர் படையுதவியுடன் பேரரசர் ஐந்தாம் சார்லஸ் மிலானிலிருந்த பிரெஞ்சுப் படையை வெளியேற்றினார். மிலான் மீட்கப்பட்டது. அதன்பின் சார்லசின் படைகள் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து பிரெஞ்சுத் துறைமுக நகரமான "மார்செயில்ஸை" (Marseilles) முற்றுகையிட்டன. இந்த முற்றுகையைப் பிரான்சிஸின் படைகள் முறியடித்தாலும், 1525- பிப்ரவரியில் பாவியா (Pavia) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பிரான்சிஸ் கைது செய்யப்பட்டார். பின்னர் சார்லசுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார் (Treaty of Madrid). அதன்படி பர்கண்டி, நெதர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மீது எவ்வித உரிமையும் கொண்டாடுவதில்லை யென்றும், பேரரசரின் சகோதரி எலியனாரை மணந்து கொள்வதாகவும் சம்மதித்து விடுதலை பெற்றார். ஆனால் பிரான்சை அடைந்தவுடன் இந்த ஒப்பந்தம் செல்லாது என அறிவித்ததால் 1527-ல் போர் மீண்டும் ஆரம்பித்தது.



ஐந்தாம் சார்லஸ்

## ரோமின் மீது படையெடுப்பு :

1527-ல் மீண்டும் போர் ஆரம்பித்தபோது சில இத்தாலிய அரசுகளும், போப்பும் பிரெஞ்சு மன்னர் பிரான்சிஸுக்கு உதவி செய்தனர். காரணம் சார்லஸின் செல்வாக்கையும், வலிமையையும் கண்டு அஞ்சியதே காரணம். இவர்கள் தங்களுக்குள் **'காக்னாக் புனிதக் கூட்டணி'** (Holy league of Cognac) ஒன்றை ஏற்படுத்திக்கொண்டன. சார்லசின் படைகள் இத்தாலியில் புகுந்தன. அப்போது படைவீரர்களுக்கு சம்பளப்பாக்கி இருந்ததால் இத்தாலிய நகரங்களை கொள்ளையடிக்கத் திட்டமிடப்பட்டது. எனவே போப்பின் இருப்பிடமான ரோம் நகர் தாக்கப்பட்டது சூறையாடப் பட்டது. சுமார் 4000 மக்கள் இறந்தனர். மடாலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் யாவும் சூறையாடப்பட்டன. அங்கிருந்த நூலகம் கூட இந்த சூறையாடலுக்குத் தப்பவில்லை. போப் ஓடி ஒளிந்துகொண்டார். இச்செயல்களுக்கு சார்லஸ் நேரடியான பொறுப்பு இல்லை என்றாலும் திடீரென்று கட்சிமாறிய போப்புக்கு

கிடைத்த தண்டனையை நினைத்து மகிழ்ச்சியடைந்தார். இதன்பின் சார்லஸ் போப்புடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். தனக்கு இத்தாலியில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாததால் பிரான்சிஸும் சார்லசுடன் 1529-ல் **கேம்ப்ரே உடன்படிக்கை** (Treaty of Cambray) செய்து கொண்டார். இதன்படி நேப்பிள்ஸ், மிலான், நெதர்லாந்து ஆகியவை மீது உரிமை கொண்டாடுவதில்லை என்று உறுதிமொழியளித்தார் பிரான்சிஸ்.

இதுவரை நடந்த போர்கள் மூலம் ஹாப்ஸ்பர்க் குடும்பத்து ஆதிக்கத்தின்கீழ் இத்தாலி கொண்டுவரப்பட்டது. நேப்பிள்ஸ் சார்லசின் நேரடி ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது. மிலான் அரசர், பிளாரன்ஸ் அரசர், போப்பாண்டவர் ஆகியோர் சார்லஸின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தனர். 1529-ல் சார்லஸ் இத்தாலி வந்தபோது பொலோனா (Bologna)வில் போப்பாண்டவரால் புனித ரோமானியப் பேரரசராக முடிசூட்டப்பட்டார்.

## மீண்டும் போர் :

1529-ல் கையெழுத்திடப்பட்ட காம்ப்ரே உடன்படிக்கை நிரந்தரமாக போரை நிறுத்த உதவவில்லை. 1536-ல் மிலான் கோமகன் இறந்ததும் அவ்வரசு மீது சார்லசும், பிரான்சிஸும் மீண்டும் உரிமை கொண்டாடினர். பேரரசருக்கு எதிராகப் போரிடுவதற்காக பிரான்சிஸ், ஸ்காட்லாந்து, ஸ்வீடன், டென்மார்க், ஆட்டோமானிய துருக்கியர்கள், ஜெர்மனியிலுள்ள புரட்டஸ்தாந்து அரசுகள் ஆகியோருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். போர் 1536 முதல் 1538 வரையிலும், பின்னர் 1542 முதல் 1544 வரையிலும் நடைபெற்றது. ஆனால் போரில் இருதரப்பிலுமே முன்பிருந்த வேகம் இல்லை. உற்சாகமும் இல்லை. எனவே இருதரப்பினரும் 1544-ல் **கிரஸ்பி உடன்படிக்கை** (Treaty of Crespy) செய்துகொண்டு அவரவர் கைப்பற்றிய இடங்களை தக்க வைத்துக் கொண்டனர்.

1547-ல் பிரெஞ்சுமன்னர் முதலாம் பிரான்சிஸ் இறந்தபின் அவரது மகன் இரண்டாம் ஹென்றி (1547-1559) அரியணை ஏறினார். இவரது ஆட்சியிலும் போர் தொடர்ந்து நடைபெற்றது. போரின் இந்த கட்டத்தில் போர் நிகழ்ச்சிகள் ஜெர்மனியில் வேகமாகப் பரவிவந்த புரட்டஸ்தாந்து இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. கத்தோலிக்க அரசரான ஹென்றி, ஜெர்மானிய புரட்டஸ்தாந்து அரசுகளை சார்லசுக்கு எதிராக ஊக்குவித்தார். மேலும் பிரான்சை வலிமைப்படுத்த துருக்கி, இங்கிலாந்து, போப் மூன்றாம் ஜூலியஸ், ஜெர்மானியப் புரட்டஸ்தாந்துகள் ஆகியோருடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார் ஹென்றி

## போரின் முடிவு :

1552-ல் போர் துவங்கியது. ஹென்றி ஜெர்மனியின் மீது படையெடுத்து மெட்ஸ், டூல், வெர்டன் (Metz, Toul, Verdun) ஆகிய நகரங்களைக் கைப்பற்றினார். மெட்சை மீட்க முயன்ற சார்லஸ் தோல்வியடைந்தார். உடல் நலக் குறைவினாலும் ஏமாற்றத்தினாலும் மனம் உடைந்துபோன சார்லஸ் 1556-ல் தன் பதவியைத் துறந்தார். ஆனாலும் போர் தொடர்ந்து 1559 வரை நடைபெற்றது. நீண்ட போரினால் பயனேதும் இல்லையென்றுணர்ந்த இருதரப்பினரும் போரை முடிக்க ஆவலாக இருந்தனர். எனவே பேச்சுவார்த்தைகளின் விளைவாக 1559-ல் ஏற்பட்ட **'கட்டே காம்பரசிஸ்'** (Treaty of Cateau Cambresis) உடன்படிக்கைப்படி போர் முடிவடைந்தது. இதன்படி கலே (Calais) நகரத்தை எட்டு ஆண்டுகளுக்கும், மெட்ஸ், டூர், வெர்டன் ஆகியவற்றை நிரந்தரமாகவும் பிரான்ஸ் வைத்துக்கொள்ளவேண்டும். தாம்வென்ற மற்ற பகுதிகளை பிரான்ஸ் விட்டுவிட வேண்டும். மிலான், நேப்பிள்ஸ் அரசுகள் ஸ்பெயினுக்குச் சொந்தமானது. ஸ்பானிய அரசன் இரண்டாம் பிலிப், பிரெஞ்சு மன்னர் ஹென்றியின் மகள் எலிசபெத்தை மணம் செய்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு சார்லஸ் பிரான்சுடன் செய்த இடைவிடாத போர்களினால் இத்தாலியில் ஹாப்ஸ்பர்க் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. பிரான்சின் எல்லை ரைன் நதிவரை விரிந்தது. கிழக்கு ஐரோப்பாவில் துருக்கிய ஆதிக்கம் வளர இப்போர்கள் வழிவகுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஜெர்மனியில் புரட்டஸ்தாந்து இயக்கம் வளர்வதற்கு மிக உதவியாக இருந்தது.

## ஐந்தாம் சார்லஸ் துருக்கியுடன் செய்த போர்கள் :

1453-ல் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றிய துருக்கியர்கள் கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் ஒரு பேரரசை நிறுவி ஐரோப்பாவையே கைப்பற்றத் திட்டம் தீட்டினர். ஐந்தாம் சார்லஸ் காலத்தில் துருக்கிய சுல்தானாக இருந்த இரண்டாம் சுலைமான் (1520-1561) தனித்தும், சில சமயங்களில் பிரான்சின் உதவியுடனும் ஐரோப்பாமீது அடிக்கடி படையெடுத்து வெற்றி பெற்றார். 1521-ல் ஹங்கேரி மீது படையெடுத்தார். தான் பதவியேற்றபோது ஹங்கேரிய அரசர் வாழ்த்துச் செய்தி கூறவில்லை என்பதே இதற்குக் காரணம். முதலில் பெல்கிரேட் நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். பின் செர்பியா முழுவதும் அவர் வசமானது. 1526-ல் மொகாக்ஸ் (Mohacs) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஹங்கேரியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. ஆனால் ஐந்தாம் சார்லசின் சகோதரர் பெர்டினாண்டு ஹங்கேரியப் பகுதிகளுக்கு உரிமை கொண்டாடினார்.

1529-ல் ஆஸ்திரியா மீது படையெடுத்தார் சுலைமான். வீயன்னா மீது தாக்குதல் நடத்தப்பட்டது ஆனால் எதிர்ப்பு அதிகமிருந்ததால் மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் தாக்குதல் நடத்தினார். ஐந்தாம் சார்லஸ் துருக்கிய அபாயத்தைச் சமாளிக்க போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார் ஆனால் 1541-ல் சுலைமானின் படைகள் மீண்டும் போர்தொடுத்து ஹங்கேரியின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. 1547-ல் ஐந்தாம் சார்லசும் பெர்டினாண்டும் சுலைமானின் இந்த வெற்றிகளை ஒப்புக் கொண்டனர்.

இவை தவிர சார்லஸின் ஸ்பானிய இத்தாலிய மாநிலங்கள் ஆப்பிரிக்கக் கடற்கரையோரங்களிலிருந்த முகமதியக் கடற்கொள்ளைக் காரர்களின் தாக்குதலுக்குள்ளாயின. இவர்கள் துருக்கியர்களுடன் சேர்ந்து கொண்டு சார்லசுக்குத் தொல்லை கொடுத்தனர் இந்த கடற்கொள்ளைக்காரர் களின் கொட்டத்தை அடக்கும் நோக்கத்துடன் 1535-ல் பேரரசர் சார்லஸ் ஒரு பெரிய கப்பற்படையைத் திரட்டி, கொள்ளைக்காரர்களின் இருப்பிடமான டூனிஸ் (Tunis)நகரைக் கைப்பற்றினார். மேலும் இக்கடற் கொள்ளைக்காரர்களை அடக்க முயன்றபோது, கொள்ளைக்காரர்களுக்கு பிரெஞ்சு அரசர் முதலாம் பிரான்சிசும், சுலைமானும் உதவ முன்வந்தனர் 1541-ல் மீண்டும் ஒரு படையைத் திரட்டி, கொள்கைகாரர்களின் தலைவனான பார்பரோசாவின் இருப்பிடமான அல்ஜியர்ஸ் நகரைக் கைப்பற்ற முயற்சி எடுத்தார் சார்லஸ் ஆனால் இது தோல்வியில் முடிவடைந்தது

## சார்லசும் ஜெர்மனியும் :

ஐந்தாம் சார்லஸ் புனித ரோமானியப் பேரரசராகப் பதவியேற்றிருந்த போது தான் ஜெர்மனியில் புரட்டஸ்தாந்து சமயம் தோன்றியது. ஜெர்மானிய சிற்றரசர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். தங்களது அரசியல் அதிகாரத்தை வளர்த்துக்கொள்ள நினைத்தனர். எனவேதான் சார்லஸை எதிர்த்தனர் இவர்கள் புரட்டஸ்தாந்து சமயத்தை ஆதரித்ததன் மூலம், தீவிர கத்தோலிக்கரான ஐந்தாம் சார்லஸின் எதிரியாயினர் தனக்கு இருக்கும் அரசியல் அதிகாரம் காக்கப்பட வேண்டுமானால் கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று உணர்ந்து கொண்டார் சார்லஸ். 1521-ல் புரட்டஸ்தாந்து சமயத்தை ஒடுக்குவதற்கான ஆணைகள் இவருடைய தலைமையில் வோர்ம்ஸில் கூடிய டயட் சபை வெளியிட்டது. புரட்டஸ்தாந்தினரை ஒடுக்க சார்லஸ் எடுத்த முயற்சிக்கு ஜெர்மனியில் பலத்த எதிர்ப்பு தோன்றியது. அதன் விளைவாக 1531-ல் லூதரின் சமயத்தைப் பின்பற்றிய எல்லா ஜெர்மன் சிற்றரசர்களும் சேர்த்து 'ஸ்மால்கால்டன் சங்கம்' ஒன்றை அமைத்து சார்லசுக்கு எதிராகப் போர் தொடுக்க ஆயத்தமானார்கள். ஆனால் துருக்கியர் படையெடுப்பு, மற்றும் பிரெஞ்சுத் தொல்லைகள் காரணமாக சார்லஸ் உடனடியாக போர் செய்யத் தயாராக இல்லை.

எனவே புரட்டஸ்தாந்துகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் உள்ள வேறுபாடுகளைத் தீர்க்க, 1545-ல் டிரன்ட் நகரத்தில் மகாசபை ஒன்றைக் கூட்டுவதற்கு ஆதரவளித்தார். ஆனால் புரட்டஸ்தாந்துகள் சமரசத்திற்குத் தயாராக இல்லை. எனவே சமரச முயற்சியைக்கைவிட்டு, போருக்கு ஆயத்தமானார் சார்லஸ். 1546-ல் ஆரம்பித்த இந்தப் போருக்கு 'ஸ்மால் கால்டிக் போர்' என்று பெயர். இந்தப் போரில் சார்லசுக்குச் சாதகமான நிலை ஏற்படவில்லை. எனவே 1553-ல் ஜெர்மன் பிரச்சனையைத் தீர்க்கும் பொறுப்பை தனது தம்பி பெர்டினாண்டிடம் ஒப்படைத்தார் சார்லஸ். பெர்டினாண்டின் முயற்சியால் 1555-ல் ஆக்ஸ்பர்க் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி லூதரின் சமயத்திற்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ('சார்லசும் ஜெர்மனியும்' பற்றி சமய சீர்திருத்த இயக்கம் அத்தியாயத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது மாணவர்கள் அதனைப் படித்துக் கொள்ளலாம்)

## சார்லஸும் ஸ்பெயினும் :

முதலாவதாக சார்லஸ் ஸ்பானிய நாட்டின் அரசனாகத்தான் 1517-ல் பதவியேற்றார். அங்கு தனது ஆட்சியில் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்களையே அதிகமாகச் சேர்த்துக்கொண்டார். இதற்குக் காரணம் தனது இளமைக்காலம் முழுவதையும் நெதர்லாந்தில்தான் கழித்தார் சார்லஸ். இப்படி நெதர்லாந்துக் காரர்களையே அதிகாரிகளாகவும், ஆலோசகர்களாகவும் நியமித்துக் கொண்டதால், ஸ்பானிய மக்கள் இவரை அந்நியராகவே கருதினர். ஆயினும் எதிர்ப்புகளையெல்லாம் அடக்கி ஸ்பெயினை கண்டிப்புடன் ஆட்சி புரிந்தார்.

## ஐந்தாம் சார்லசின் குடியேற்றக் கொள்கை :

ஐந்தாம் சார்லஸின் ஆட்சியில் தான் கடல்கடந்த குடியேற்றங்கள் மேலும் வளர்ச்சியடைந்து ஸ்பானியப் பேரரசு முழுமை பெற்றது. இவருடைய காலத்தில்தான் கடல்வழிப் பயணங்கள் அதிகமாக ஊக்குவிக்கப்பட்டன. 1519-ல் ஆல்வரெஸ் டி பினெடா (Alvarez de Pineda) என்ற மாலுமி புளோரிடாவிலிருந்து மெக்ஸிகோ வரையிலுள்ள அமெரிக்க கரைப் பகுதியை ஆராய அனுப்பப்பட்டார். இதேயாண்டில் ஸ்பானிய அரசின் கீழ் பணியாற்றிக் கொண்டிருந்த பெர்டினாண்டு மெகலன் மேற்கு நோக்கி பயணம் செய்து பிலிப்பைன்ஸ் தீவுகளைக் கண்டுபிடித்தார். ஹெர்னாண்டோ கோர்டஸ் என்ற ஸ்பானியர் மெக்ஸிகோவை அடைந்து அப்பகுதியில் வாழ்ந்த அஸ்டெக்குகளை வீழ்த்தி அங்கு ஸ்பானிய ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். 1522-ல் கேஸ்டைல் நாட்டு அஞ்சா நெஞ்சரான பிரான்ஸிஸ் கோ பிசாரோ (Francisco Pizarro) பனாமாவிற்கு வந்தார். தென் அமெரிக்காவில் பெருவை ஆதிக்கம் செய்து கொண்டிருந்த இன்காஸ் (Incas) பழங்குடியினரை வென்று அவர்கள் நாட்டில் ஸ்பானிய ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். இவ்வாறு மெக்ஸிகோ, நியுஸ்பெயின்,

மத்திய அமெரிக்கா, வெனிசூலா, நியுகிரனடா, பெரு, பொலிவியா, மேற்கு சிலி ஆகியவை ஸ்பானிய அரசரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. அர்ஜன்டீனா, பராகுவே ஆகிய நாடுகளில் குடியேற்றம் நடந்து கொண்டிருந்தது.

இவ்வாறு அமெரிக்காவில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஸ்பானியக் குடியேற்றங்கள் ஐந்தாம் சார்லஸ் காலத்தில் பொருளாதாரச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு ஸ்பெயின் ஏராளமான செல்வத்தைப் பெற்றது. வெள்ளிச் சுரங்கங்கள் பல தோண்டப்பட்டு 'புதிய உலகத்திலிருந்து' (New World) ஏராளமான வெள்ளி ஸ்பெயினில் வந்து குவிந்தது. இந்த செல்வத்தினால்தான் ஸ்பானிய மொழி, கலாச்சாரம் ஆகியவை புதிய உலகில் புகுத்தப்பட்டன. மேலும் இந்தக் குடியேற்றங்களில் கிறிஸ்தவ மதப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு அந்த நாடுகளின் பழங்குடி மக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர். இந்த குடியேற்றங்களை நிர்வகிக்க ஸ்பானிய அரசு நிர்வாக முறை ஒன்றை உருவாக்க வேண்டியதிருந்தது. "Council of the Indies' என்னும் ஒரு அமைப்பு அமைக்கப்பட்டு குடியேற்றங்களின் நிர்வாகப்பொறுப்பு இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

## சார்லசும் இங்கிலாந்தும் :

ஐந்தாம் சார்லசுக்கும், பிரெஞ்சு மன்னர் முதலாம் பிரான்சிசுக்கு மிடையே ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியில் இங்கிலாந்து தலையிட்டு ஐரோப்பிய அரசியலில் ஒரு சிறப்பிடத்தைப் பெற ஆசைப்பட்டது. இங்கிலாந்தின் அரசன் எட்டாம் ஹென்றி பிரான்சிஸை ஆதரித்தார். ஆனால் சார்லஸ் தனது விடா முயற்சியால் இங்கிலாந்தின் நிலையை மாற்றி தனக்கு படையுதவியளிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் இந்த சுமுகமான நிலை அதிக காலம் நீடிக்கவில்லை. எட்டாம் ஹென்றி தனது மனைவி காத்தரீனை விவாகரத்து செய்ய போப்பாண்டவரிடம் அனுமதி கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டது. காரணம் காதரீன் ஐந்தாம் சார்லசின் சித்தியாவார். எனவே தனது சித்தி காதரீனுக்கு ஆதரவாக மணவிலக்கு கோரிக்கையை மறுக்கும்படி போப்பாண்டவரை வேண்டினார். போப் அனுமதி கொடுக்கவில்லை. ஆயினும் ஆனிபோலின் என்பவளை ஹென்றி மணந்து கொண்டார். இதனால் சார்லசுக்கும் ஹென்றிக்கும் இருந்த உறவு பாதிக்கப்பட்டது. ஆனால் 1553-ல் எட்டாம் ஹென்றியின் மகள் மேரி இங்கிலாந்தின் அரியணை ஏறியவுடன் இவ்விரு நாடுகளுக்குமிடையே சுமுகமான உறவு ஏற்பட்டது. ஐந்தாம் சார்லஸ் தனது மகன் இரண்டாம் பிலிப்பை மேரிக்கு மணமுடித்து வைத்தார்.

## ஐந்தாம் சார்லஸ் பதவி துறத்தல் :

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஓய்வில்லாமல் போர்களிலும் அரச காரியங்களிலும் ஈடுபட்டு அமைதியற்று இருந்த சார்லஸுக்கு அரச பதவியே கசந்தது. தனது மாபெரும் பேரரசை தனது சகோதரர் பெர்டினாண்டுக்கும், மகன்

இரண்டாம் பிலிப்புக்கும் பிரித்துக்கொடுத்து பதவி துறக்க முடிவு செய்தார். 1555 அக்டோபர் மாதம் புருசல்ஸ் நகரிலுள்ள **Golden Flence** அரண்மனையில் தனது அரசுரிமையைத் துறப்பதாக அறிவித்தார். 1556-ல் ஸ்பானிய, இத்தாலிய அரசுரிமைகளைப் பிலிப்புக்கும், ஆஸ்திரியாவையும், பேரரசர் பதவியையும் பெர்டினாண்டுக்கும் கொடுத்துவிட்டு, அரச பதவியைத் துறந்து ஸ்பெயினிலுள்ள ஒரு கிறிஸ்தவ மடாலயத்தில் சேர்ந்தார். அங்கு 1558-ல் உயிர் நீத்தார்.

## மதிப்பீடு :

பேரரசர் ஐந்தாம் சார்லஸ் ஐரோப்பிய வரலாற்றில் தோன்றிய மாபெரும் மன்னர். கடமை உணர்ச்சி, மதிநுட்பம், போர்த்திறமை பெற்றிருந்த ஒரு தீவிர கத்தோலிக்கர். இவருடைய ஆட்சி ஸ்பெயினில் புகழ் வாய்ந்ததாக இருந்தது. நெதர்லாந்தில் நன்மதிப்புடனும், திறமையாகவும் ஆட்சி செய்தார். ஆனால் இத்தாலியில் தோல்வியடைந்திருந்தார். ஐந்தாம் சார்லஸ் பதினாறாம் நூற்றாண்டின் கலாச்சாரத்தில் ஊறித்திளைத்தவர். மறுமலர்ச்சிக் கலையில் குறிப்பாக ஓவிய, இசைக்கலையில் ஈடுபாடு கொண்டு அவற்றைப் போற்றி வளர்த்தார். ஸ்பெயினின் ஆதிக்கம் கடல்கடந்து வெளிநாடுகளில் பரவுவதற்குக் காரணமாக இருந்தார். ஐரோப்பாவிலிருந்து துருக்கியர்களை வெளியேற்ற முடியவில்லையென்றாலும், அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினார். மத்தியதரைக்கடல் பகுதியில் கடற்கொள்ளைக்காரர்களின் கொட்டத்தை அடக்கினார்.

தீவிரக் கத்தோலிக்கரான சார்லஸ் புரட்டஸ்தாந்து சமயத்தை ஒடுக்கும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். திருச்சபையின் ஒற்றுமையைக் காக்க முடியவில்லையென்றாலும், ஜெர்மனியில் அமைதியை நிலைநாட்டுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கினார். ஜெர்மனியில் புரட்டஸ்தாந்துகளின் வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லையென்றாலும், ஸ்பெயின், நெதர்லாந்து, தெற்கு ஜெர்மனி ஆகிய பகுதிகளில் புரட்டஸ்தாந்து மதம் பரவுவதைத் தடுத்தார். இத்தாலியிலும் ஸ்பெயினின் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். ஹாப்ஸ்பர்க் குடும்பத்தை வலிமையுள்ளதாக்கினார். இவரது பரந்த அரசின் வெவ்வேறு பகுதிகள் இவர் ஆட்சியில், முன்பிருந்ததைவிட வலிமை, செல்வம், புகழ் ஆகியவற்றுள் மிகுந்து விளங்கின. இவ்வளவு சாதனைகளைப் புரிந்த ஐந்தாம் சார்லஸ் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதி ஐரோப்பாவின் தலைசிறந்த மன்னர் என்பதில் ஐயமில்லை!

# 7. இரண்டாம் பிலிப்

ஐரோப்பிய வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியை ஐந்தாம் சார்லஸின் காலம் என்று அழைப்பதுண்டு. அதேபோல் பின்பகுதியை இரண்டாம் பிலிப்பின் காலம் என்று கூறுவது பொருந்தும். வலிமையிலும், செல்வாக்கிலும் ஸ்பெயின் உச்சநிலை அடைந்திருந்த நேரத்தில்தான், இரண்டாம் பிலிப் அரியணை ஏறினார். அரிய பல சாதனைகள் படைக்கப் போவதுபோல் காணப்பட்டார் மிகப்பெரிய அதிகாரத்திற்கு வாரிசானாலும், இரண்டாம் பிலிப்பின் ஆட்சி, பொதுவாகத் தோல்வியென்றே கருதப்படுகிறது. இவருடைய ஆட்சிக்காலத்தில் பிரான்ஸ் அமைதியாக இருந்தது. இங்கிலாந்து அரசி எலிசபெத் யாரும் அசைக்கமுடியாத நிலையில் ஆட்சி செய்துகொண்டி ருந்தார். நெதர்லாந்தின் பெரும்பகுதி புரட்சிசெய்து இவருடைய ஆட்சியிலிருந்து விடுவித்துக்கொண்டது இவருடைய உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் யாவும் தோல்வியடைந்தன. 1598-ல் இவருடைய ஆட்சி முடிவடைந்தபொழுது ஸ்பெயின் வலிமையும், செல்வாக்கும் இழந்து காணப்பட்டது.

## இரண்டாம் பிலிப்பின் குணங்களும், கொள்கைகளும் :

1527-ல் பிறந்த பிலிப் தனது 28-ம் வயதில் 1556-ல் ஸ்பானிய அரசராகப் பதவியேற்றார். தனது தந்தை ஐந்தாம் சார்லஸின் பரந்த பேரரசு முழுவதும் இவருக்குக் கிடைக்கவில்லையென்றாலும், ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய பேரரசு இவருடையதாகவேயிருந்தது. ஸ்பெயின், நெதர்லாந்து, பிரெஞ்சு காம்டி, மிலான், நேப்பிள்ஸ், சிசிலி, வட ஆப்பிரிக்காவில் சில பகுதிகள் அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகளில் ஸ்பானியக் குடியேற்றங்கள், பிலிப்பைன்ஸ் தீவுகள் ஆகியவை மட்டுமே (!) இவருக்குக் கிடைத்தது.

இரண்டாம் பிலிப் தனது தந்தை ஐந்தாம் சார்லஸைப் போலல்லாமல் ஸ்பெயினைத் தனது தாய்நாடாகக் கருதினார். ஸ்பெயினிலேயே பிறந்து வளர்ந்ததால் தாய்நாட்டின் மீது அவருக்கு ஒரு தனிப்பற்று இருந்தது. ஸ்பானிய மொழியையே பேசினார் ஸ்பெயினிலேயே வாழ்ந்தார். ஸ்பானியர்களையே அரசு அதிகாரிகளாக நியமித்தார். இரவு பகல் பாராது தனது பேரரசின் நிர்வாகத்தில் கவனம் செலுத்தினார். ஸ்பெயின் வலிமையும் புகழும் பெறுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொண்டார். உலகத்திலேயே ஸ்பெயினைத் தலைசிறந்த நாடாக ஆக்கவேண்டுமென்பது அவர் நோக்கம்.

இரண்டாம் பிலிப் கத்தோலிக்க சமயத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர். எனவேதான் புதிதாகத் தோன்றிய புரட்டஸ்தாந்து சமயத்தைப் பூண்டோடு

ஒழித்துக்கட்ட நினைத்தார் கிறிஸ்துவ நாகரிகத்தையே அழிக்கப்போகும் இயக்கமாக புரட்டஸ்தாந்து சமயத்தைக் கருதினார். நாட்டின் நலனைவிட சமயத்தின் நலனைப் பேணுவதுதான் தனது கடமை என்று நினைத்தார். வெளிநாட்டுக் கொள்கையில் இவரது கத்தோலிக்க மதப்பற்று குறுக்கிட்டது. நாட்டின் செல்வமெல்லாம் சமயப் போர்களில் வீணாக்கப்பட்டது. திருச்சபையில் ஒற்றுமையில்லையென்றால் நாட்டிலும் ஒற்றுமை ஏற்படாது என்று எண்ணி இன்குசிஷன் மூலம் கத்தோலிக்க சமய எதிரிகளை ஒழிக்க முற்பட்டார்.

இரண்டாம் பிலிப் மிகச்சிறந்த நிர்வாகத் திறமை பெற்றிருந்தார். கடினமாக உழைத்து அரசின் எல்லாக் காரியங்களையும் தானே நேரடியாக கவனித்து வந்தார். நல்ல குறிக்கோள்களையும் அதனைச் செயல்படுத்துவதற்குத் தேவையான ஆற்றலும், மன உரமும் பெற்றிருந்தார். நாட்டின் அலுவல்களைக் கவனிக்கும் திறமையும், வலிமையும், பொறுமையும் அவரிடமிருந்தன. போர் புரிவதைவிட இராஜதந்திரத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். தனது கருத்துக்களுக்கு முரண்பட்ட கருத்துக்கள் தோன்றுவதை விரும்பாத பிலிப், அந்த எதிர்ப்புகளை நசுக்கவும் தயங்கவில்லை.

## இரண்டாம் பிலிப்பின் உள்நாட்டுக்கொள்கை :

## 1. ஸ்பானிய நிர்வாகத்தை ஒருமுகப்படுத்தினார் :

ஸ்பெயின் ஒரே அரசாக இருந்தாலும் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சி இல்லை. காஸ்டைல், அரகான், கிரானடா ஆகிய பழைய பிரிவுகள் இன்னமும் இருக்கத்தான் செய்தன. அவற்றின் நிர்வாக முறைகள், சட்டதிட்டங்கள் ஆகியவையும் வேறுபட்டே இருந்தன. இந்த வேறுபாடுகளை ஒழித்து ஸ்பெயினை ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்பது பிலிப்பின் நோக்கமாகும். இந்த ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமானால் அரசரின் அதிகாரத்தை வலுப்படுத்துவதே சிறந்தவழி என்று நினைத்தார். எனவே நாட்டு நிர்வாகத்தை தானே நேரடியாக மேற்கொண்டார். மாநிலங்களிலிருந்த **'கோர்டஸ்' (Cortes)** என்ற சட்டமன்றங்களின் உரிமைகளை ஒப்புக்கொள்ளவில்லை. இவைகளின் உதவியின்றியே சட்டங்கள் இயற்றினார். இதுவரை முக்கியமான பதவிகளில் அமர்ந்திருந்த நிலமானிய பிரபுக்களை நீக்கிவிட்டு, நடுத்தர வகுப்பினரை அப்பதவிகளில் அமர்த்தினார் இவ்வாறு அரசரின் ஆணைப்படி, அரசரின் பணியாளர்களால், அரசரால் நடத்தப்பட்ட அரசாங்கமாக விளங்கியது ஸ்பானிய நிர்வாகம்!

## 2. நிதி நிலை :

இரண்டாம் பிலிப் பதவி ஏற்றபோது ஸ்பெயினின் நிதிநிலை வலுவடைந்திருந்தது. அமெரிக்க வாணிபத்தில் ஸ்பெயின் ஏகபோக உரிமை

பெற்றிருந்ததின் காரணமாக அங்கிருந்து செல்வம் வந்து குவிந்தது. ஆனால் அந்த செல்வத்தை தொழில்களிலும் வாணிபத்திலும் முதலீடு செய்து தன் நாட்டின் தொழில்களை வளர்க்கத் தவறினார் பிலிப். இதனால் ஸ்பெயினுக்கு தேவைப்பட்ட பொருட்கள் அனைத்தும் அயல் நாடுகளிலிருந்து விலை கொடுத்தே வாங்கப்பட்டன. இதனால் ஸ்பெயினின் செல்வம் அயல்நாடுகளைச் சென்றடைந்தது. இவை தவிர பலவிதமான முன்யோசனையற்ற வரிகளும் வாணிபத்தை வளரவிடாமல் தடுத்தன. இதற்கு ஒரு உதாரணம் அரசாங்கத்தினரால் விதிக்கப்பட்ட **'அல்கபாலா'** (Alcabala) என்ற பத்து சதவீத விற்பனை வரியாகும். இந்த வரி உற்பத்தியை வெகுவாகப் பாதித்தது.

## 3. உள்நாட்டுக் கிளர்ச்சிகள் அடக்கப்படுதல் :

இவரது அரசியல் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிளர்ச்சிகள் ஏற்பட்டது. 1568-ல் ஸ்பெயினின் தென்பகுதியில் வசித்துவந்த மூர்கள் செய்த கிளர்ச்சி இரண்டு ஆண்டுகள் கடும் போருக்குப்பின் ஒடுக்கப்பட்டது. 1591-ல் அரகான் அரசில் தோன்றிய மற்றொரு கிளர்ச்சி அடக்கப்பட்டது. இவற்றையெல்லாம்விட பயங்கரமான புரட்சி நெதர்லாந்தில் உருவெடுத்தது. இக்கிளர்ச்சிகளை அடக்குவதற்கு பிலிப் கையாண்ட கொடூர முறைகளும், அதற்கு ஏற்பட்ட செலவுகளும் ஸ்பெயினின் பொருளாதாரத்தைப் பாதித்தன.

## 4. அமெரிக்கக் குடியேற்ற ஆட்சிமுறை :

அமெரிக்கக் கண்டத்தில் நிறுவப்பட்டிருந்த ஸ்பானியக் குடியேற்றங் களைப் பேணிப் பாதுகாப்பதும், நிர்வகிப்பதும் இவரது முக்கியப் பொறுப்புகளில் ஒன்றானது. அமெரிக்காவில் கிட்டத்தட்ட ஒன்றரைலட்சம் ஸ்பானியர் குடியேறியிருந்தனர். இருநூறுக்கும் மேற்பட்ட நகரங்களை நிறுவியிருந்தனர். இந்தக் குடியேற்றங்களின் ஆட்சிப் பொறுப்பை Council of the Indies என்ற சபை நடத்தி வந்தது. இது அரசரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கியது. வைஸ்ராய்கள், கவர்னர்கள் போன்ற அதிகாரிகளை இந்தக் கவுன்சில் நியமித்தது. குடியேற்றங்களின் திருச்சபை அரசருக்குக் கட்டுப்பட்டே இயங்கியது. இரண்டாம் பிலிப் ஆட்சிக் காலத்தில் ஸ்பானியரல்லாதவர் அமெரிக்காவிற்கு சென்று தங்குவதும், வியாபாரம் செய்வதும் தடை செய்யப்பட்டது. இந்த வியாபாரத்தை நடத்துவதற்கென்று "Casa-de Contractation' (House of Trade) என்ற ஒரு நிறுவனம் இருந்தது. இதற்கு உதவியாக "Consullado' என்ற வியாபாரிகளின் நீதிமன்றமும் செயல்பட்டு வந்தது. அமெரிக்காவில் ஸ்பானிய ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட்டது, சுரங்கங்களின் அபிவிருத்தி, குடியேற்ற ஆட்சிமுறை நிறுவப்படுதல் ஆகியவை பிலிப்பின் ஆட்சியின் சாதனைகள் ஆகும்.

## இரண்டாம் பிலிப்பின் வெளிநாட்டுக் கொள்கை :

### 1. பிரான்சுடன் போர் :

1559-ல் பிரான்சுக்கும், ஸ்பெயினுக்குமிடையே ஏற்பட்ட கட்டே காம்ப்ரசிஸ் உடன்படிக்கையின்படி இத்தாலியின் மீதிருந்த ஸ்பானிய ஆதிக்கம் பிரான்சால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இரண்டு நாடுகளுக்குமிடையே நடந்த ஆதிக்கப்போட்டி முடிவடைந்துவிட்டதாகவே தோன்றியது. ஆனால் இரண்டாம் பிலிப் காலத்தில் இருநாடுகளும் மீண்டும் போரில் ஈடுபட்டன. ஆனால் இப்போது சமயக் காரணங்களின் அடிப்படையிலேயே போர் ஏற்பட்டது. பிரான்சில் 1562 முதல் 1593 வரை சமயப் போர்கள் நடைபெற்றன. இதில் கத்தோலிக்கர்களுக்கு ஆதரவளித்தார் இரண்டாம் பிலிப்.

காதரின்-டி-மெடிசியின் மூன்றாவது மகனான மூன்றாம் ஹென்றி (1574-1589) பிரான்சை ஆண்ட வாலாய்ஸ் குடும்பத்தின் கடைசி அரசன். ஏனெனில் காதரின்-டி-மெடிசியின் மூன்று மகன்களுக்கும் வாரிசு இல்லை. எனவே மூன்றாம் ஹென்றிக்குப் பிறகு பிரெஞ்சு அரியணை, புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த நவாரே நாட்டு அரசரான பூர்பான் வம்சத்து ஹென்றிக்குத்தான் என்பது உறுதியானது. இதனை பிரான்சிலிருந்த கைஸ் குடும்பத்தினரும் இரண்டாம் பிலிப்பும் வெறுத்தனர். பிரெஞ்சு அரசு ஒரு புரட்டஸ்தாந்து மன்னரிடம் போவதைத்தடுக்க கைஸ் கோமகன் ஹென்றியும் இரண்டாம் பிலிப்பும் சேர்ந்து கத்தோலிக்க லீக் ஒன்றை அமைத்துக் கொண்டனர். அதன்படி கைஸ் கோமகனுக்கு ஆட்சியைக் கைப்பற்ற ராணுவஉதவி அளிக்க உறுதி அளித்தார். இதன் உடனடியான விளைவுதான் **''மூன்று ஹென்றிகளின் போர்''** (War of Three Henries). இதில் சம்பந்தப்பட்டவர்கள் 1) பிரெஞ்சு மன்னர் மூன்றாம் ஹென்றி, 2) பிரெஞ்சு அரியணைக்கு வாரிசாக அமைந்துள்ள நவாரே நாட்டு ஹென்றி, 3) பிலிப்பின் ஆதரவுடன் அரியணைக்குப் போட்டியிடும் கைஸ்கோமகன் ஹென்றி ஆகியோர் ஆவர்.

இந்த மூன்று ஹென்றிகளின் போர் கொஞ்சம் வித்தியாசமான போர். பிரெஞ்சு அரசர் மூன்றாம் ஹென்றியும், நவாரே ஹென்றியும் இந்தப் போரைப் பயன்படுத்திக் கொண்டு பிலிப் தங்கள் நாட்டில் தலையிடுவதை விரும்ப வில்லை. பிரான்ஸ் நாட்டின் சுதந்திரத் தன்மையைக் காக்க உறுதிபூண்டார்கள். நவாரே ஹென்றிக்கு பிரெஞ்சு மிதவாத கத்தோலிக்கர்களின் ஆதரவும், இங்கிலாந்து அரசி எலிசபெத்தின் ஆதரவும் இருந்தது. இச்சமயத்தில் பிலிப் தனது முழுக்கவனத்தையும் பிரான்சில் செலுத்த முடியவில்லை. எனவே அவரது ஆதரவாளர் கைஸ்கோமகன் ஹென்றி 1588-ல் படுகொலை செய்யப்பட்டார். 1589-ல் அரசர் ஹென்றியும் படுகொலை செய்யப்படவே பூர்வான் வம்ச நவாரே ஹென்றி நான்காம் ஹென்றி (1589-1610) என்ற பட்டத்துடன் பிரெஞ்சு மன்னரானார்.

புதிதாகப் பதவியேற்ற நான்காம் ஹென்றி ஸ்பானியர்களுடன் தொடர்ந்து போரில் ஈடுபட்டார். 1598 வரை இப்போர் நடைபெற்றது. பிரான்சின் மீது தனது ஆதிக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதை உணர்ந்த பிலிப் 1598-ல் **வெர்வின் உடன்படிக்கையை** பிரான்சுடன் செய்துகொண்டார். இது கட்டே காம்ப்ரசிஸ் உடன்படிக்கையை அப்படியே உறுதிப்படுத்தியது. இவ்வாறு தன்னுடைய பிரெஞ்சுக் கொள்கையில் பிலிப் தோல்வியடைந்தார்.

## 2. துருக்கியர் மீது வெற்றி (லெபன்டோ போர்) :

இவரது வெளிநாட்டுக் கொள்கை துருக்கியைப் பொருத்தவரையில் ஸ்பெயினுக்குப் புகழைத் தேடித்தரும் வகையில் அமைந்தது. இவர் துருக்கி மீது அடைந்த வெற்றியானது ஐரோப்பாவில் ஆட்டோமான் துருக்கியர்களின் ஆதிக்கம் வளர்வதை தடுத்து நிறுத்தியது. இது இரண்டாம் பிலிப்பின் சாதனையாகும். பேரரசர் ஐந்தாம் சார்லஸ் துருக்கியரின் வலிமையை ஓரளவு ஒடுக்கியிருந்த போதிலும், ஸ்பானியக் கரையோரப் பகுதிகளும், ஸ்பானியக் கப்பல்களும் தொடர்ந்து இவர்களின் தாக்குதல்களுக்கு இலக்காயின. மேலும் 1570-ல் சைப்ரஸ் தீவை துருக்கியர்கள் கைப்பற்றினர். மால்ட்டா, கிரீட் தவிர மத்தியதரைக் கடல் பகுதியில் உள்ள மற்ற எல்லா இடங்களையும் ஐரோப்பியர் இழந்தனர். இத்தாலி முழுவதுமே இவர்கள் தாக்குதல்களுக்கு உள்ளானது.

எனவே துருக்கியர்களின் ஆதிக்க வளர்ச்சியைத் தடுக்க இரண்டாம் பிலிப் ஈடுபட வேண்டுமென்று போப் ஐந்தாம் பயஸ் வேண்டுகோள் விடுத்தார். அதன்படி கிறிஸ்தவ உலகைக் காக்க ஜெனோவா, வெனிஸ், போப், இரண்டாம் பிலிப் ஆகிய நான்கு பேர்களின் கூட்டுப்படை ஒன்று உருவாக்கப்பட்டது. ஸ்பெயினின் கடற்படைத் தலைவரும், மன்னரின் மாற்றாந்தாயின் புதல்வரும் ஆஸ்திரியாவைச் சேர்ந்தவருமான **டான்ஜான்** (Don John) என்பவரின் தலைமையில் போருக்கு ஆயத்தம் செய்யப்பட்டது. 203 கப்பல்களைக் கொண்ட இந்த கிறிஸ்தவப்படை 273 கப்பல்களைக் கொண்ட துருக்கியப் படையை கிரீசுக்கு மேற்கு கடற்கரையிலுள்ள காரிந்து வளைகுடாவில் **லெபன்டோ** (Lepento) என்னுமிடத்தில் 1571 அக்டோபர் 7-ம் தேதி நடைபெற்ற போரில் சிதறடித்தது. எட்டாயிரம் துருக்கியர் மடிந்தனர். இந்த லெபன்டோ போரில் கிறிஸ்தவ நாடுகள் அடைந்த வெற்றியில் இரண்டாம் பிலிப்புக்கு முக்கியப் பங்கு உண்டு. இந்த வெற்றிச் செய்தி ரோம் நகரை அடைந்த போது போப் ஐந்தாம் பயஸ் கூறிய புகழ்பெற்ற வார்த்தைகள் : "There was a man sent from God whose name was Don John'. ஆயிரமாண்டுகளாகக் கிறிஸ்தவர்களுக்கும், முகமதியர்களுக்கும் நடந்துவந்த போரில் நல்ல திருப்பம் ஏற்பட்டது. மேற்கு ஐரோப்பா துருக்கியப் படையெடுப்பிலிருந்து விடுதலை அடைந்தது

## 3. போர்ச்சுக்கல் ஸ்பெயினுடன் இணைக்கப்படுதல் :

தனக்கு இருக்கும் பேரரசின் பரப்பளவு போதாது என்று நினைத்து ஐபீரிய தீபகற்பம் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவர ஆசைப் பட்டார் இரண்டாம் பிலிப். இதனால் தொல்லைகளை பிலிப் விலை கொடுத்து வாங்கியது போலாகி விட்டது. ஐபீரியத் தீபகற்பத்திலுள்ள போர்ச்சுக்கல், ஸ்பெயினின் ஆட்சிக்கு உட்படாமல் சுதந்திரமாக இருந்தது. 1580-ல் போர்ச்சுக்கல் அரசர் வாரிசு இன்றி இறந்துபோகவே ஸ்பானியப்படை ஒன்றை ஆல்வா கோமகனார் தலைமையில் அனுப்பி போர்ச்சுக்கல்லைக் கைப்பற்றி, ஸ்பெயினுடன் இணைத்தார் பிலிப். அதன் குடியேற்றப் பகுதிகளான தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கக் குடியேற்றங்கள், கிழக்கிந்தியத் தீவுகள் போன்றவை ஸ்பெயினுக்குக் கிடைத்தன. இந்த இணைப்பினால் ஸ்பெயினுக்கு அதிக பொறுப்புகளும், செலவுகளும், சிக்கல்களுமே ஏற்பட்டது. பிலிப்புக்கு ஏந்த நன்மையும் ஏற்படவில்லை. போர்ச்சுக்கீஸிய மக்கள் ஸ்பானிய நிர்வாகத்தை எதிர்த்து தொடர்ந்து கிளர்ச்சி செய்து வந்தனர். அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு போர்ச்சுக்கல் மீண்டும் சுதந்திரமடைந்தது.

## இரண்டாம் பிலிப்பும் இங்கிலாந்தும்
## (உடைக்க முடியாத கப்பற்படை - Invincible Armada)

பிலிப்பின் ஆட்சியில் ஆரம்பத்தில் இங்கிலாந்துடன் நட்புறவு நிலவி வந்தது. ஏனெனில் இங்கிலாந்து அரசியான மேரி டியுடர் (1553-58) இரண்டாம் பிலிப்பின் மனைவியாவார். மேரி இங்கிலாந்தில் கத்தோலிக்க மதத்தை மீண்டும் ஏற்படுத்தி தன் வெளிநாட்டுக் கொள்கையை பிலிப்பின் கொள்கைக்கு ஏற்ப அமைத்துக் கொண்டார். 1558-ல் மேரி குழந்தையின்றி இறந்தாள். எனவே அவளது ஒன்றுவிட்ட சகோதரியும், எட்டாம் ஹென்றிக்கும் ஆனிபோலினுக்கும் பிறந்த மகளுமான எலிசபெத் இங்கிலாந்தின் அரசியானாள். எலிசபெத் அரசி காலத்தில் ஸ்பெயினுக்கும், இங்கிலாந்துக்குமிடையே நிலவிவந்த நட்புறவு கெட்டு இரண்டு நாடுகளும் பகைமை கொண்டன. இங்கிலாந்தைத் தோற்கடிக்க யாரும் வெல்ல முடியாத கப்பற்படையைத் (Invincible Armada) தயார்செய்து போரிட்டார் பிலிப். போரில் பிலிப் படுதோல்வியடைந்தார்.

## உடைக்கப்பட முடியாத கப்பற்படைப் போர் ஏற்படக் காரணங்கள் :

### a) எலிசபெத் அரசி பின்பற்றிய சமயக்கொள்கை :

எலிசபெத் அரசி மிகுந்த தேசப்பற்றும், தன்னம்பிக்கையும், நுண்ணறிவும் படைத்தவர். தனது இராஜதந்திர முறைகளால் எலிசபெத்தை

வெற்றிகாண நினைத்த பிலிப்பின் எண்ணம் நிறைவேறவில்லை. இறுதியில் தன்னைத் திருமணம் செய்துகொள்ள கேட்டார் பிலிப். ஆனால் தன்னையோ இங்கிலாந்தையோ பிலிப்பிடம் அர்ப்பணிக்க மறுத்துவிட்டார் எலிசபெத். மேலும் எலிசபெத் அரசி ஒரு புரட்டஸ்தாந்து சமயவாதி தீவிரக் கத்தோலிக்கரான பிலிப், எலிசபெத்தைப் பதவியிலிருந்து தூக்கி எறியவும், இங்கிலாந்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தி எலிசபெத்தைக் கொலைசெய்யவும் திட்டம் தீட்டினார். அவருக்குப்பின் பட்டத்திற்கு வர இருந்தவரும், கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றியவருமான மேரி ஸ்டூவர்ட் மூலம் சதித்திட்டம் தீட்டினார் பிலிப்.

## b) ஸ்காட்லாந்தின் மேரி ஸ்டுவர்ட்டின் சதித்திட்டம் :

ஸ்காட்லாந்து ஸ்டூவர்ட் வம்சத்தில் தோன்றிய மேரி பிரெஞ்சு மன்னர் இரண்டாம் பிரான்சிஸை மணந்தார். ஆனால் பிரான்சிஸ் இறந்துவிடவே 1561-ல் ஸ்காட்லாந்து திரும்பிவிட்டார். பதினெட்டு வயதில் கணவனை இழந்த மேரி, முதலில் ஹென்றி டார்ன்லி (Henry Darnley) என்பவரையும், பின் அவரைக் கொலை செய்த போத்வெல் பிரபுவையும் (Earl of Bothwell) மணந்தார் இந்த முறையற்ற திருமணங்களை விரும்பாத ஸ்காட்லாந்து பிரபுக்கள் மேரியை நாடு கடத்தினர். தனது மகன் ஆறாம் ஜேம்ஸுக்கு ஆதரவாக முடிதுறந்து எலிசபெத் உதவிகேட்டு 1568-ல் இங்கிலாந்து ஓடிவந்தாள். ஆனால் வந்த இடத்தில் எலிசபெத்தின் கைதியானாள்.

சிறையில் கைதியாக இருந்தபோது மேரி, இங்கிலாந்து அரசுக்கும், ஸ்காட்லாந்து அரசுக்கும் எதிராக செய்த சதித்திட்டம் தெரியவந்தது. இந்த சதித் திட்டங்களுக்கு ஸ்பானிய மன்னன் இரண்டாம் பிலிப் உடந்தை என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. புரட்டஸ்தாந்துகளுக்கும், நாட்டு சுதந்திரத்திற்கும் பாடுபடுபவர் எலிசபெத் என்றும், கத்தோலிக்கத்திற்கும், ஸ்பானிய நாட்டிற்கு ஆதரவாகவும் செயல்படுகிறவர் மேரி என்றும் மக்கள் உணர்ந்து கொண்டனர். சரியான அரசியல் சூழ்நிலை வந்தபோது எலிசபெத் அரசியின் உத்தரவின் பேரில் 1587-ல் மேரியின் தலை துண்டிக்கப்பட்டது. பிலிப்பின் திட்டங்கள் தோல்வியடையவே, மேரி ஸ்டூவர்டின் மரணத்திற்குப் பழிக்குப்பழி வாங்க இங்கிலாந்தின் மீது படையெடுக்க முடிவு செய்தார்.

## c) ஸ்பெயினுக்கு எதிரான இங்கிலாந்து மாலுமிகளின் செயல்கள் :

இரண்டாம் பிலிப்பு இங்கிலாந்தின் மீது படையெடுக்க, சமய, அரசியல் காரணங்களைவிட முக்கிய காரணமாக விளங்கியது பொருளாதாரக் காரணமே. எலிசபெத் அரசியின் ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்திலிருந்தே இங்கிலாந்து

மாலுமிகளும் கடற்படைத் தளபதிகளும் ஸ்பானிய வியாபாரத்திற்கு ஊறுவிளைவித்து வந்தனர். ஹாக்கின்ஸ், டிரேக், ராலே, காவெண்டிஷ், கில்பர்ட் (Hawkins, Drake, Raleigh, Cavendish, Gilbert) போன்றோர் ஸ்பானிய வாணிபத்திற்குத் தடையாக இருந்தனர். ஸ்பானியக் குடியேற்ற நாடுகளான மெக்ஸிகோ, தென் அமெரிக்காவிலிருந்து வெள்ளி போன்ற பல பொருட்களை ஏற்றி வந்த ஸ்பானியக் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். ஸ்பானியக் குடியேற்றங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. ஸ்பெயினின் கட்டளையை மீறி ஸ்பானியக் குடியேற்றங்களில் ஹாக்கின்ஸ் அடிமை வியாபாரம் செய்து வந்தார். எலிசபெத் அரசியின் ஆதரவின் பேரிலேயே நடந்து வந்த இந்தச் செயல்கள் பிலிப்பின் ஆத்திரத்தையும் கோபத்தையும் தூண்டியது.

## d) நெதர்லாந்து கிளர்ச்சியாளர்களுக்கு இங்கிலாந்து செய்த உதவி :

ஸ்பானிய அதிகாரத்திற்கு உட்பட்ட நெதர்லாந்து சுதந்திரமடைய துடித்தது. இந்த சுதந்திரக் கிளர்ச்சியாளர்களுக்கு எலிசபெத் உதவி செய்தார். பணஉதவி, படைஉதவி அளிக்கப்பட்டது. இதனால் இரண்டாம் பிலிப் இங்கிலாந்தின் மீது மேலும் பகைமை கொண்டார்.

## e) இங்கிலாந்தின் அரியணை மீது இரண்டாம் பிலிப்பின் உரிமை :

மேரிஸ்டூவர்ட் தனது உயிலில், தனது மகனுக்கு அரசுரிமை இல்லையென்றும் ஆங்கில அரசு ஸ்பெயின் நாட்டு இரண்டாம் பிலிப்பைச் சேரவேண்டும் என்றும் எழுதிவைத்திருந்தாள். எனவே உயிலிலுள்ள உரிமையைப் பெறவும், மேரியின் மரணத்திற்குப் பழிவாங்கவும், நெதர்லாந்து கிளர்ச்சியாளர்களுக்கு உதவிய எலிசபெத்தைத் தண்டிக்கவும், ஐரோப்பியப் புரட்டஸ்தாந்துகளை ஒடுக்கவும் ஒரு மாபெரும் கப்பற்படையைத் தயார் செய்தார் பிலிப். அதுவே 'மேற்கொள்ளப்பட முடியாத கப்பற்படை' என்று பெயர் பெற்றது.

## மேற்கொள்ளப்பட முடியாத கப்பற்படை (Invincible Armada)

1588-ல் இரண்டாம் பிலிப் இங்கிலாந்தைத் தாக்குவதற்கான பெரிய திட்டத்தைத் தயாரித்தார். இதற்கு போப் ஐந்தாம் சிக்ஸ்டஸ் ஆதரவளித்தார். 130 கப்பல்கள், 8000 மாலுமிகள், 19,000 போர் வீரர்களையும் கொண்டதாக ஒரு கப்பற்படையைத் தயாரித்தார் இரண்டாம் பிலிப். இதுதான் ஐரோப்பிய வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற Invincible Armada ஆகும். பிலிப்பின் இந்த ஏற்பாடுகளை அறிந்த இங்கிலாந்து அளவில் சிறியதும், எளிதில் நகரக்

கூடியதுமான கப்பல்களைக் கொண்ட ஒரு படையைத் திரட்டியது. இரண்டாம் பிலிப்பின் பேராசைத் திட்டத்தைக் கண்ட ஆங்கில மக்கள் வெகுண்டெழுந்தனர். தங்கள் வேற்றுமைகளை மறந்து, தொழிலாளர்கள், விவசாயிகள், நிலச்சுவான்தார்கள், புரட்டஸ்தாந்துகள், கத்தோலிக்கர் ஆகியோர் அனைவரும் நாட்டைக்காக்க ஒன்று திரண்டனர். எனவே பிளவுபட்ட இங்கிலாந்தை எதிர்பார்த்த பிலிப் அதிர்ச்சியடைந்தார்.

1588 ஜூலை 19-ல் ஸ்பானியக்கப்பல்கள் இங்கிலாந்தை நோக்கிப் புறப்பட்டன. இங்கிலாந்தின் கப்பற்படை ஆற்றலும் வீரமும் மிக்க ஹோவேர்ட் பிரபு, சர்பிரான்ஸிஸ் டிரேக், சர்மார்டின், பிரோபிஷர் (Lord Howard, Sir Francis Drake, Sir Martin Firobisher) ஆகியோரின் தலைமையில் போரிட்டன. ஆங்கிலக் கால்வாயில் எட்டு நாட்கள் தொடர்ந்து நடந்த போரின் இறுதியில் ஸ்பானியக் கப்பல்கள் சிதறடிக்கப்பட்டன. கலே துறைமுகத்தில் நின்ற பல ஸ்பானியக் கப்பல்கள் அழிக்கப்பட்டன. இந்தப் பயங்கரத் தாக்குதல்களைச் சமாளிக்க பிரிட்டிஷ் தீவின் வடபக்கமாக ஸ்பானியக் கப்பல்கள் சென்றபோது பயங்கரப் புயல் ஏற்பட்டு, அநேக கப்பல்கள் நொறுங்கி ஸ்காட்லாந்து, அயர்லாந்துக் கரைகளில் ஒதுங்கியது. ஒரு சில கப்பல்கள் மட்டுமே ஸ்பெயினை வந்தடைந்தன. படுதோல்வியடைந்து கேவலம் அடைந்த பிலிப் இங்கிலாந்து கத்தோலிக்கர்களை எலிசபெத்துக்கு விரோதமாகத் தூண்டிவிட்டுப் பார்த்தார். ஆனால் அதுவும் நிறைவேறவில்லை

## இப்போரின் விளைவுகள் :

1. இப்போர் கத்தோலிக்கத்திற்கும், புரட்டஸ்தாந்து சமயத்திற்கும் ஏற்பட்ட பூசலில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இங்கிலாந்தில் புரட்டஸ்தாந்து மதம் தீவிரமடையவும், ஸ்காண்டிநேவியா, வடஜெர்மனி போன்ற இடங்களில் புரட்டஸ்தாந்து மதம் பரவவும் வழிவகுத்தது.

2. இங்கிலாந்தின் கடற்படையின் மேன்மையை ஐரோப்பாவும், உலக நாடுகளும் உணர முடிந்தது. எலிசபெத் அரசியின் புகழ், பெருமை உச்சநிலையடைந்தது.

3. இங்கிலாந்தில் தேசிய உணர்வும், நாட்டுப்பற்றும் வலுவடைந்தன

4. இப்போரின் விளைவாக இங்கிலாந்தின் ஆதிக்க வளர்ச்சி வேகமடைந்தது. புதிய உலகத்தின்மீது ஸ்பெயின் பெற்றிருந்த ஆதிக்கமும் ஏகபோக உரிமையும் தகர்த்தெறியப்பட்டன. கடல் ஆதிக்கத்திலும், குடியேற்றங்களை அமைப்பதிலும் இங்கிலாந்து முன்னணி நிலை வகிக்க இந்த வெற்றி உதவியது.

5. ஸ்பெயினின் வீழ்ச்சிக்கு இப்போர் ஒரு அறிகுறியாக அமைந்தது. இரண்டாம் பிலிப்பின் பெருமை குன்றியது.

## நெதர்லாந்து விடுதலைப் போர் (1596-1598)

**(Dutch war of Independence)**

இரண்டாம் பிலிப்பின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட மற்றொரு பெரிய தோல்வி நெதர்லாந்து ஸ்பானிய ஆதிக்கத்தை எதிர்த்து சுதந்திரமடைந்த நிகழ்ச்சியாகும். இவருடைய ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்திலிருந்தே கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து இறுதியில் சுதந்திரமடைந்தது நெதர்லாந்து. இது ஸ்பெயினுக்கு பேரிடியாக அமைந்தது. ஸ்பெயின் தனது வலிமை, பெருமை ஆகியவற்றை இழப்பதற்குக் காரணமானது. ஒரு சுதந்திரமான புரட்டஸ்தாந்து சமயத்தைப் பின்பற்றிய நாடாக உருவானது நெதர்லாந்து. இது சுமார் ஒரு நூற்றாண்டுகாலம் உரிமைக்கும் சுதந்திர உணர்வு ஒளிபெறுவதற்குமான நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தலைமை தாங்கிச் செயலாற்றியது.

## நெதர்லாந்தைப் பற்றிய ஒரு சிறுகுறிப்பு :

ரைன்நதி ஆற்றின் முகதுவாரத்தில் அமைந்திருக்கும் மிகச் செழிப்பு மிக்க ஒரு நாடாக விளங்கியது நெதர்லாந்து. இது இடைக்காலத்தில் ஏற்பட்ட பல அரசியல் மாற்றங்களின் விளைவாக ஹாப்ஸ்பர்க் ஆட்சிக்கு உட்பட்டு பேரரசர் ஐந்தாம் சார்லசுக்குக் கிடைத்தது. இது பதினேழு தனித்தனி சிற்றரசுகளால் ஆனது. ஒவ்வொரு சிற்றரசும் தனித்தனி அரசியலமைப்பை உடையதாகவும் இருந்தது. ஐந்தாம் சார்லஸ் அந்த சிற்றரசுகளை ஒருமைப் படுத்தி ஒரு மைய ஆட்சி முறையைப் புகுத்த முயற்சி செய்து தோல்வியடைந்தார். வணிகத்திலும், ஆலைத் தொழிலிலும் முதன்மையாக விளங்கியது நெதர்லாந்து. ஆன்ட்வெர்ப், கென்ட், புருஜஸ், ஆம்ஸ்டர்டாம் ஆகிய நகரங்கள்யாவும் செல்வம் மிகுந்த தொழிலதிபர்களின் ஆதிக்கத்தில் இருந்தன. மற்ற ப்குதிகளிலிருந்து கிடைத்த வருமானத்தை விட அதிக வருமானம் நெதர்லாந்திலிருந்து ஸ்பெயினுக்குக் கிடைத்தது. நெதர்லாந்து மக்களைக் கட்டுப்படுத்தி ஆட்சி புரிவது அவ்வளவு எளிதல்ல. ஐந்தாம் சார்லசுக்குப்பின் பதவியேற்ற இரண்டாம் பிலிப் காலத்தில் கடுந்தொல்லைகள் ஏற்பட்டு அதன் விளைவாக நெதர்லாந்து ஸ்பானிய ஆதிக்கத்திலிருந்து பிரிந்து சுதந்திர நாடானது!

## நெதர்லாந்து சுதந்திரப்போர் ஏற்படக் காரணங்கள் :

நெதர்லாந்து விடுதலைப்போர் தோன்றுவதற்கான காரணங்கள் ஐந்தாம் சார்லஸ் ஆட்சிக் காலத்திலேயே காணப்பட்டாலும், புரட்சி அவர் ஆட்சிக் காலத்தில் ஏற்படாமல் இரண்டாம் பிலிப்பின் ஆட்சியில் தான் ஏற்பட்டது.

1566-ல் ஆரம்பித்து இரண்டாம் பிலிப்பின் ஆட்சியின் இறுதிக்காலம் (1598) வரை நீடித்த இப்போருக்கான காரணங்கள் வருமாறு.

## 1. இரண்டாம் பிலிப் நெதர்லாந்தில் பின்பற்றிய பொருளாதாரச் சுரண்டல் கொள்கை :

இரண்டாம் பிலிப் நெதர்லாந்தில் பொருளாதாரச் சுரண்டல் கொள்கையை பின்பற்றினார். வியாபாரம், தொழில் மூலமாக நெதர்லாந்து ஈட்டிய பெருஞ்செல்வத்தை தனது ஆதிக்க வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தினார். இவ்வாறு நெதர்லாந்து நாட்டின் செல்வம், ஸ்பெயின் நாடு ஆதிக்கமும், புகழும் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுவதை டச்சு நாட்டு மக்கள் வெறுத்தனர். மேலும் ஸ்பெயினின் நன்மையைக் கருதி நெதர்லாந்தின் வியாபாரத்தின் மீது தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்தார். இது நெதர்லாந்து நகரங்களின் பொருளாதார வளர்ச்சியை வெகுவாகப் பாதித்தது மேலும் நெதர்லாந்து மக்கள் மீது கடுமையான வரிகளை விதித்தார். இச்செயல் களால் நெதர்லாந்து மக்கள் பிலிப்பின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தனர்.

## 2. இரண்டாம் பிலிப்பின் ஏதேச்சதிகார ஆட்சி :

ஸ்பெயினைப் போல நெதர்லாந்திலும் பிலிப் தனது ஏதேச்சதிகார ஆட்சியை நிறுவினார். ஒரே குடையின் கீழ் நெதர்லாந்தில் பதினேழு சிற்றரசர்களுக்குமிடையே உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்த விரும்பினார். இதற்காக மாநிலங்கள், நகரங்கள், பிரபுக்கள் அனுபவித்து வந்த சிறப்புரிமைகள் யாவும் பறிக்கப்பட்டன. அவை பரம்பரையாக அனுபவித்து வந்த சுயாட்சி உரிமைகள் பறிக்கப்பட்டன. அரசனின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டன இதனால் பிலிப்பின் ஆட்சியை நெதர்லாந்து மக்கள் வெறுத்தனர்

## 3. இரண்டாம் பிலிப் அந்நியர் என்ற எண்ணம் :

நெதர்லாந்து மக்கள் பிலிப்பின் ஆட்சி அந்நியர்களுக்காக. அந்நியர்களால் நடத்தப்படும் ஆட்சி என்றே கருதினர் இதற்குக் காரணம் இரண்டாம் பிலிப் நெதர்லாந்து மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளாததே யாகும். பிலிப்புக்கு டச்சு மொழி தெரியாது. டச்சு பழக்கவழக்கங்களைப் புரிந்து கொள்ளவில்லை 1559-க்குப் பிறகு பிலிப் நெதர்லாந்துக்குச் செல்லவேயில்லை நாட்டு நிர்வாகத்திலும், திருச்சபையிலும் எல்லா முக்கியப் பொறுப்புகளும் ஸ்பானியர்களுக்கும், மற்ற அயல் நாட்டவர்களுக்குமே கொடுக்கப்பட்டன அதிக ஊதியம் கொடுக்கக்கூடிய அரச பதவிகளை அயல்நாட்டினரே பெற்றிருப்பதைக்கண்டு டச்சு மக்கள் பொறுமினர். தேசிய உணர்வால் தூண்டப்பட்ட டச்சு மக்கள் பிலிப்பின் ஆட்சிக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபட்டனர்

## 4. இரண்டாம் பிலிப் பின்பற்றிய சமயக்கொள்கை :

சமய ஒற்றுமையில்லாமல் அரசியல் ஒற்றுமை ஏற்படுத்த முடியாது என்று எண்ணினார் பிலிப். எனவே நெதர்லாந்தின் வட மாகாணங்களில் பரவிய கால்வீனியத்தை ஒழிக்கவும், அங்கு கத்தோலிக்க சமயத்தை நிலைநாட்டவும் பிலிப் தீவிரமாகச் செயல்பட்டார். கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொள்ளும்படி குடிமக்களை வற்புறுத்தினார். ஸ்பானிய மேற்றிரானியர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, சீரான சட்டங்களை உருவாக்கி தனது கொள்கைகளை நிலைநாட்ட ஸ்பானிய விசாரணை மன்றங்களைப் (Inquisition) பயன்படுத்தினார். இந்த விசாரணை மன்றம் சமய விரோதிகள் என்று கூறி எண்ணற்ற டச்சு மக்களைக் கொடுமைப் படுத்தியது. மனிதத்தன்மையற்ற பிலிப்பின் இந்த கொடுமையான நடவடிக்கைகளை டச்சு மக்கள் தீவிரமாக எதிர்க்க ஆரம்பித்தனர்.

## நெதர்லாந்து விடுதலைப் போரின் முக்கிய நிகழ்ச்சிகள் :

**பகர ஆட்சியாளராக மார்கரெட் :** இரண்டாம் பிலிப் பட்டத்திற்கு வந்தவுடன், நெதர்லாந்தின் பகர ஆட்சியாளராக (Regent) தங்கள் நாட்டிலுள்ள பிரபுக்களுள் ஒருவரையே நியமிப்பார் என்று மக்கள் நினைத்தனர். ஆனால் பிலிப் தனது மாற்றாந்தாயின் புதல்வியும் பார்மாவைச் சேர்ந்தவருமான மார்கரெட் (Margaret of Parma) என்பவரை 1559-ல் நியமித்தார். இவரது ஆட்சியில் நெதர்லாந்தில், இன்குசிஷன் விசாரணை மன்றத்தின் கொடுமைகளை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தனர். மேலும் பிரெஞ்சுப் போர்களில் ஈடுபட்ட ஸ்பானியப் படைவீரர்களுக்கான செலவுகளை நெதர்லாந்து மக்கள் மீது சுமத்தியதாலும் கடுமையான கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதனால் மார்கரெட் மக்களுக்கு சில சலுகைகளை அளித்து திருப்திப்படுத்த முயன்றாள். ஸ்பானியப்படைகள் நெதர்லாந்திலிருந்தே நீக்கப்பட்டன. மக்கள் வெறுப்புக்குள்ளான சில அரசு அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

**The Beggers :** ஆனால் மக்களின் எதிர்ப்பு தணியவில்லை. ஆரஞ்சு நாட்டு வில்லியம், எக்மாண்ட் (Prince William of Orange, Egmont) ஆகிய தலைவர்களின் தலைமையில் எதிர்ப்பு உருவாகியது. 1566-ல் பிரபுக்கள் பலர் நாட்டின் அரசியலமைப்பை மாற்ற வேண்டுமென்றும், விசாரணை மன்றத்தை ஒழிக்க வேண்டுமென்றும் மார்கரெட்டை வேண்டினர். இவர்களைக் கண்ட மார்கரெட் அஞ்சினார். அப்போது அரசவையைச் சேர்ந்த பார்லேமாண்ட் (Barlaymont) என்ற பிரபு 'மேன்மை தங்கிய ரீஜண்ட் அம்மையார் இந்த பிச்சைக்காரர்களைக் கண்டா அஞ்சுவது?' என்று தைரியமூட்டினார். எனவே அதுமுதல் பிலிப்பின் கொள்கைகளை எதிர்த்து வந்த டச்சுமக்கள் தங்களை 'பிச்சைக்காரர்கள்' (The Beggers) என்று அழைத்துக் கொண்டு, பிச்சை எடுக்கும்

பாத்திரத்தையும், பையையும் தங்களுக்கு அடையாளமாகக் கொண்டார்கள். இந்தப் 'பிச்சைக்காரர்களின்' கோரிக்கைகள் பிலிப்புக்கு அனுப்பப்பட்டன. ஆனால் பிலிப் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

**The iconoclastic Fury of** 1566 : எனவே புரட்டஸ்தாந்துகளில் தீவிரவாதிகள் சிலர் ஆண்ட்வெர்ப் நகரில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். கத்தோலிக்க ஆலயங்களில் உள்ள படங்களும், சிலைகளும் உடைத்தெறியப்பட்டன. புனித இடங்கள் பாழாக்கப் பட்டது. மடாலயங்கள் சூறையாடப்பட்டன. பல வாரங்கள் தொடர்ந்து நடைபெற்றன இந்த வெறிச் செயல்கள். இது நெதர்லாந்து வரலாற்றில் The iconoclastic Fury of 1566 என்றழைக்கப்படுகிறது. இரண்டாம் பிலிப் சகிப்புத் தன்மை காட்டாமல், பரந்த மனப்பான்மையில்லாமல், இக்கிளர்ச்சியை அடக்குமுறை மூலம் ஒடுக்க முற்பட்டார்.

### புதிய ரீஜண்டாக ஆல்வா கோமகன் (Duke of Alva) :

கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்களைத் தண்டிக்கவும், பழிவாங்கவும், 1567-ல் ஆல்வாக் கோமகனாரை ரீஜென்டாக நியமித்து அவர் தலைமையில் எல்லா வசதிகள் பொருந்திய ஒரு பெரிய படையை நெதர்லாந்துக்கு அனுப்பினார் பிலிப். இவர் கிளர்ச்சியாளர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்காக **'தொல்லை ஒழிப்பு மன்றம்'** (Council of Troubles) ஒன்று ஏற்படுத்தினார். அவர் பதவியிலிருந்த ஆறு ஆண்டுகளுக்குள் பல பிரபுக்கள் உட்பட எட்டாயிரம் பேர் தூக்கிலிடப்பட்டனர். இந்தக் கொடுமைகளைத் தாங்க முடியாத மக்கள் பலர் நாட்டை விட்டே ஓடினர். இந்த இரக்கமற்ற மிருகத்தனமான கொடுஞ்செயல் புரிந்த மன்றத்தை 'இரத்த வெறி மன்றம்' **(Council of Blood)** என்று மக்கள் அழைத்தனர். ஆல்வாக் கோமகனின் கொடுமையின் விளைவாக நெதர்லாந்தின் தென்பகுதியில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கர்களும் வடபகுதி புரட்டஸ்தாந்தினருடன் சேர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட ஆரம்பித்தனர்.

**அமைதியாளர் ஆரஞ்சு நாட்டு வில்லியம் (William, the Silence) :** ஸ்பானியக் கொடுங்கோலாட்சிக்கு எதிராக உருவான இயக்கம் ஆரஞ்சு வில்லியம் தலைமையில் வேகமாகச் செயல்படத் தொடங்கியது. ஜெர்மனியில் ஆரஞ்சு என்ற சிற்றரசுக்கு இவர் ஆட்சியாளர் ஆனதால் இவர் ஆரஞ்சு வில்லியம் என்றழைக்கப்பட்டார். இவருக்கு நெதர்லாந்தில் ஏராளமான சொத்துக்கள் இருந்ததால், அந்த நாட்டு மக்களில் ஒருவராகவே தன்னைக் கருதினார். முதலில் ஐந்தாம் சார்லஸின் ஆதரவைப் பெற்று நிர்வாகத் துறையில் முக்கியப் பணியை ஏற்றார். நாளடைவில் இரண்டாம் பிலிப்பின் ஆட்சியின் மீது வெறுப்பு ஏற்பட்டு, டச்சு மக்களை ஸ்பானியக் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்க உறுதிபூண்டார். கத்தோலிக்க சமயத்தவராக இருந்தாலும், சமயத்தின்

பெயரால் டச்சு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், துன்பங்களையும் கண்டு மனம் பொறுக்க மாட்டாமல் புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவினார். இவர் டச்சு மக்களின் விடுதலைக்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தார். விடாமுயற்சியுடனும், அதிகச் செலவுடனும் ஒரு படையைத் தயார்செய்து ஸ்பானியர் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்ட முடிவு செய்தார்.

**புரட்சிப் போர்கள்** : ஆல்வாக் கோமகனின் ஆட்சியில் நெதர்லாந்தில் கொடுமைகள் தளர்த்தப்படவேயில்லை. அத்துடன் வரிகள் அதிகமாக வசூலிக்கப்பட்டன. மேலும் ஸ்பானியப் படைகள் நகர மக்களுக்குப் பல் கொடுமைகளை இழைத்தனர். நிலைமையைச் சமாளிக்க முடியாத பிலிப் ஆல்வாக் கோமகனை பதவி நீக்கம் செய்துவிட்டு 'ரெக்குசென்' (Requesens) என்பவரை ரீஜண்டாக 1573-ல் நியமித்தார். இதற்கிடையில் வடமாநிலங்களில் ஒன்றான ஹாலந்து ஆரஞ்சு வில்லியத்தை கவர்னராக தேர்ந்தெடுத்து புரட்சியின் தலைமையை அவரிடம் ஒப்படைத்தது. ரெக்சன் பதவி ஏற்றபின், 'சமயப் பொறைக் கொள்கை, நெதர்லாந்து மக்களின் சிறப்புரிமைகளை மீண்டும் வழங்குதல், ஸ்பானியத் துருப்புகளை வெளியேற்றுதல் போன்ற கோரிக்கைகளை' நிராகரித்தார். மேலும் அவரது பிரித்தாளும் சூழ்ச்சியால் புரட்சியிலிருந்து கத்தோலிக்கத் தென்மாநிலங்கள் விலகின. வடமாநிலங்கள் மட்டும் விடுதலைப்போரைத் தொடர்ந்து நடத்தின.

**ஸ்பானியச் சீற்றம்** (Spanish Fury) : 1573-ல் லெய்டன் (Leydon) நகரம் ரெக்குசெனின் முற்றுகையிலிருந்து புரட்சியாளர்களால் விடுவிக்கப் பட்டது. இதற்குக் காரணம் லெய்டன் நகரம் கடல்மட்டத்திற்குத் தாழ்வாக இருந்ததால் வில்லியம் கடல் அணைகளை (Dykes) உடைத்து விடுமாறு கட்டளையிட்டார். இதனால் கடல் நீர் நகரில் புகுந்தது. ஸ்பானியப் படைகள் முற்றுகையைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படித் தாக்குதல்கள் நடைபெற்று வந்தபோது 1576-ல் ரெக்குசன் திடீரென இறந்து விட்டதால், உணவோ, ஊதியமோ சரிவரக் கிடக்கப் பெறாத ஸ்பானியப் படைகள் நெதர்லாந்து நகரங்களைத் தாக்கி கொள்ளையிட்டது. அன்ட்வொர்ஷிப் நகரம் கொள்ளையடிக்கப்பட்டது. ஸ்பானியப் படைகள் புரிந்த இந்த கொலை கொள்ளைச் செயல்கள் 'ஸ்பானியச் சீற்றம்' (Spanish Fury) என்றழைக்கப்பட்டது.

## கென்ட் அமைதியாக்கம் (Pacification of Ghent) :

'ஸ்பானியச் சீற்றம்' நெதர்லாந்து மக்களிடையே மனக்கசப்பையும் ஸ்பானிய ஆட்சி மீது வெறுப்பையும் ஏற்படுத்தின. இனம், மொழி, சமய வேறுபாடுகளை மறந்து எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து ஸ்பானிய ஆட்சியை எதிர்க்க இந்த 'ஸ்பானிய சீற்றம்' வழிவகுத்தது. 1576-ல் நெதர்லாந்திலுள்ள

பதினேழு மாநிலங்களின் பிரதிநிதிகளும் 'கென்ட்' நகரில் கூடி 'கென்ட் அமைதியாக்கம்' என்ற ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இதன்படி ஸ்பானிய ஆதிக்கத்தைநெதர்லாந்திலிருந்துஒழிக்கவேண்டுமென்றும்,இந்தக்குறிக்கோளை அடைய பதினேழு மாநிலங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மக்களைச் சமாதானப்படுத்த டான்ஜான் என்பவரை அனுப்பினார் பிலிப். ஆனால் அவர் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

## நெதர்லாந்தில் ஒற்றுமைக் குலைவு :

1578-ல் பார்மாவின் கோமகனான அலக்ஸாந்தர் பர்னெஸ் (Alexander Farnese) என்பவரை ரீஜண்டாக நியமித்தார் பிலிப். இவர் 1592 வரை பணியாற்றினார். இவர் தனது ராஜதந்திரத்தின் மூலம் வட மாநிலங்களுக்கும், தென் மாநிலங்களுக்குமிடையே பிளவை ஏற்படுத்தினார். இதன்படி மூன்று தென்மாநிலங்களான ஆர்டாய், ஹெனால்ட், டூவே (Artois, Hainault, Douay) ஆகியவை 1579-ல் ஆராஸ் (Arras) என்ற இடத்தில் கூடி 'கத்தோலிக்க மதத்தைப் பாதுகாக்கவும், இரண்டாம் பிலிப்பின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்வதாகவும்' உறுதி எடுத்துக் கொண்டன. எனவே ஏழு புரட்டஸ்தாந்து வட மாகாணங்கள் உட்ரக்ட் (Utrecht) என்னுமிடத்தில் கூடி, 'தங்கள் மத உரிமைகளையும், சுதந்திரத் தன்மையையும் பாதுகாப்பதற்காக 'உட்ரக்ட் ஐக்கியம்' (Union of Utrecht) என்ற உடன்பாட்டைச் செய்து கொண்டன. இவ்வாறு கென்ட் அமைதியாக்கம் குலைக்கப்பட்டு நெதர்லாந்து கத்தோலிக்க தெற்கு, புரட்டஸ்தாந்து வடக்கு என்று இரண்டாகப் பிளவுபட்டது.

## டச்சு நாடுகளின் சுதந்திரப் பிரகடனம் :

நெதர்லாந்தை இரண்டாகப் பிரிப்பதில் வெற்றி கண்ட பிலிப், இப்போது ஸ்பெயினின் முழு வெற்றிக்குத் தடையாக இருப்பது ஆரஞ்சு வில்லியத்தின் தலைமை தான் என்றுணர்ந்து அவரை ஒடுக்கும் பணியில் ஈடுபட்டார். 1581-ல் "ஆரஞ்சு வில்லியம் ஒரு தேசத்துரோகி என்றும் அவரை உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வருபவர்கட்கு தக்க சன்மானம் அளிக்கப்படும்" என்றும் அறிவித்தார் பிலிப். இதற்கு சரியானபடி வில்லியம் பதிலளித்தார். அதாவது வட மாநிலங்களின் பிரதிநிதிகள் ஹேக் நகரில் கூடி 'டச்சு விடுதலைப் பிரகடனம்' ஒன்றை 1581-ல் வெளியிட்டன. இதன்படி ஏழு வடக்கு மாநிலங்கள் தங்களை ஸ்பானிய ஆட்சியிலிருந்து விடுவித்துக் கொண்டன. பிலிப்பிற்குத் தங்கள் மேல் எவ்வித அதிகாரமும் கிடையாது என்று அறிவித்தன. அரசனின் முத்திரை உடைத்தெறியப்பட்டது. ஆனால் 1584-ல் வில்லியம் ஒரு கத்தோலிக்க சமய வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார். பிலிப் தனது ஆட்சிக்காலம் இறுதி வரை டச்சு மக்களின் சுதந்திரத்தை அங்கீகரிக்கவில்லை.

வில்லியம் இறந்த பிறகு டச்சு மக்கள் அவருடைய மகன் மாரிஸ் (Maurice) என்பவரின் தலைமையில் தொடர்ந்து போராட்டத்தை நடத்தினார்கள். 1588-ல் இங்கிலாந்துடனான போரில் பிலிப் அடைந்த தோல்வி, 1592-ல் பார்மா கோமகனின் இறப்பு ஆகிய நிகழ்ச்சிகளால் நெதர்லாந்து போரில் பிலிப் அதிக அக்கரை காட்ட முடியவில்லை. 1598-ல் இரண்டாம் பிலிப் இறந்த பின் அரியணையேறிய மூன்றாம் பிலிப்பின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் போர் தொடர்ந்து நடைபெற்றது. 1648-ல் முப்பதாண்டுப்போரின் முடிவில் கையெழுத்தான 'வெஸ்ட்பேலியா உடன்படிக்கைப்'படி டச்சு மக்களின் சுதந்திரத்தை ஸ்பெயின் ஏற்றுக்கொண்டது. இந்த சுதந்திரம் அடைந்தது வடபகுதி மாநிலங்கள் மட்டுமே! அவைகள் ஒன்று சேர்ந்து ஹாலந்து என்று அழைக்கப் பட்டது. இங்கு வாழ்ந்தவர்கள் புரட்டஸ்தாந்தினர். நெதர்லாந்தின் தென்பகுதி தொடர்ந்து ஸ்பெயினின் ஆட்சியின்கீழ்தான் இருந்து வந்தது. அது ஸ்பானிய நெதர்லாந்து என்று அழைக்கப்பட்டது. இங்கு வாழ்ந்து வந்தவர்கள் கத்தோலிக்கர்.

## நெதர்லாந்தின் வெற்றிக்குக் காரணங்கள் :

நெதர்லாந்து விடுதலைப்போர் சுமார் நாற்பது ஆண்டுகள் நடைபெற்றது. அதில் ஸ்பெயின் போர்ப்படைகளும், கடற்படைகளும், ஏராளமான பணமும் ஆழம் காண முடியாத நீர்ச்சுழியில் கொட்டினாற்போல அழிவுற்றன. நெதர்லாந்தை அடிமைப்படுத்துவதற்காக மேற்கொண்ட நெடிய பயனற்ற முயற்சி ஸ்பெயினின் அழிவிற்குப் பெரிதும் காரணமானது. டச்சு மக்கள் வெற்றி பெறுவதற்கான காரணங்கள் வருமாறு.

1. நெதர்லாந்தின் வடபகுதியிலிருந்த இயற்கையமைப்பு டச்சு மக்களின் வெற்றிக்கு துணைபுரிந்தது. இப்பகுதியில் இருந்த ஏராளமான கால்வாய்களும், டைக்ஸ் என்ற அணைச்சுவர்களும் முற்றுகையிடும் படைகளுக்கு எதிரிகளாக விளங்கின.

2. அமைதியாளர் ஆரஞ்சு வில்லியத்தின் 'தலைமை' டச்சு மக்கள் வெற்றியடைய முக்கியக் காரணம் ஆகும். அவரது தலைமையில் மக்கள் மன உறுதியுடனும், தேசிய உணர்ச்சியுடனும் போரிட்டனர். இவரது கவனமான கொள்கையால் 'திறந்த வெளிப்போர்' தவிர்க்கப்பட்டது.

3. நெதர்லாந்து கடலாதிக்கம் பெற்று விளங்கியது. எனவே ஸ்பானியர்களின் கடல் வலிமையை எதிர்த்துப் போரிட முடிந்தது.

4. டச்சு மக்கள் தங்கள் வியாபாரம் மூலம் ஏராளமான செல்வம் பெற்றிருந்தனர். எனவேதான் அவர்களால் ஏராளமான கூலிப்படைகளை அமர்த்தி ஸ்பானியர்களுக்கு எதிராக தொடர்ந்து போரிட முடிந்தது

5. ஜெர்மன் புரட்டஸ்தாந்து அரசுகள் மற்றும் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் நெதர்லாந்துக்கு உதவியளித்தன. பொருள், படை, போர்தளவாடங்கள் ஆகியவை கொடுத்து உதவி செய்தன.

6. பிலிப்புக்கு பல பிரச்சனைகள் இருந்ததாலும், தனது மதியற்ற திட்டங்களாலும் தோல்வியே கிடைத்தது. அவர் இங்கிலாந்துடன் போர் செய்துகொண்டும், பிரெஞ்சு விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டும் இருந்ததால் நெதர்லாந்தில் புரட்சியை ஒடுக்க முழுக்கவனமும் செலுத்த முடியவில்லை.

7. இறுதியாக, இங்கிலாந்திடம் இரண்டாம் பிலிப் 'மேற்கொள்ளப்பட முடியாத கப்பற்படைப்போரில்' தோற்றது டச்சு வெற்றிக்கு அடிகோலியது.

## இரண்டாம் பிலிப்பைப் பற்றிய மதிப்பீடு :

இவ்வாறு இரண்டாம் பிலிப்பின் திட்டங்கள் யாவும் தோல்வியடைந்தன. 1598-ல் இவர் ஆட்சி முடிவடைந்தபோது ஸ்பெயின் வலிமையும், செல்வாக்கும் இழந்து காணப்பட்டது. ஸ்பெயின் ஐரோப்பிய அரங்கிலிருந்து வெளியேற்றப்படும் நிலை உருவாகியது. இவரது முயற்சிகள் எல்லாம் முடிவான வெற்றியைப் பெறவில்லை. தந்தை ஐந்தாம் சார்லஸிடம் காணப்பட்ட அறிவும் பொதுநோக்கும் பிலிப்பிடம் இல்லை. இரண்டாம் பிலிப்பின் ஆட்சி பொதுவாக தோல்வி என்றே கருதப்படுகிறது. எல்லாவற்றிற்கும் காரணம் இவர் பின்பற்றிய சமயக் கொள்கையே! பிரான்ஸ், இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் விவகாரங்களில் இவர் தலையிட அடிப்படையான காரணம் சமயமே! சமயப் பொறையுடையவராக இருந்து, பரந்த நோக்கும் கொண்டிருந்தால் ஒருவேளை இரண்டாம் பிலிப் தனது ஆட்சியில் வெற்றியடைந்திருக்கலாம்.

# 8. முப்பதாண்டுப் போர்

ஜெர்மனியில் உள்ள பிராடஸ்டண்டுகளுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் இடையே 1618-ல் தொடங்கிய சமயப் போர், தொடர்ந்து முப்பது ஆண்டுகள் நடைபெற்றது. அதனால் அது, "முப்பதாண்டுப் போர்" (1618-48) எனப்பட்டது. அப்போரின் நிகழ்ச்சிகள், பெரும்பாலும் புனித ரோமப் பேரரசில் (ஐரோப்பாவில் பல போர் முனைகளில் - குறிப்பாக, ஜெர்மனி, ஸ்வீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில்) நடைபெற்றது.

முப்பதாண்டுப் போரில் கத்தோலிக்கர் சார்பாக ஸ்பெயினும் ஆஸ்திரியாவும் அதிகப் பங்கெடுத்தன. சமயப் பிரச்சனையாகத் தொடங்கிய இப்போர், 1635-ல், ஆதிக்கப் போராக மாறி, முடிவில் அரசியல் போர் ஆயிற்று.

## முப்பதாண்டுப் போருக்கான காரணங்கள்

"பிராடஸ்டண்டு சமயத்தை அடியோடு ஒழித்து, கத்தோலிக்கத்தை ஒப்பற்ற நிலைக்குக் கொண்டு வருதல்; ஜெர்மானிய சிற்றரசர்களை புனித ரோமானியப் பேரரசின் கீழ் கொண்டு வருதல்" என்ற நோக்கங்களுக்காக முயலப்பட்டதே முப்பதாண்டுப் போர். அப்போருக்கு சமயம் சார்ந்த காரணங்களும் அரசியல் சார்ந்த காரணங்களும் இருந்தன. அவை,

1. **ஆக்ஸ்பர்க் உடன்படிக்கை** : ஜெர்மானிய சிற்றரசர்களின் பகுதிகளில் உள்ள மக்கள், சமயச் சுதந்திரம் வேண்டுமென ஐந்தாம் சார்லஸ் (புனித ரோமானிய மற்றும் ஸ்பெயினின் பேரரசர்) இடம் கோரினர். அதை ஏற்ற சார்லஸ், 1555-ல் ஜெர்மானிய சிற்றரசர்களுடன் ஆக்ஸ்பர்க் உடன்படிக்கை (Peace of Augsburg) யை செய்துகொண்டார். அதன்படி லூதரன் சமயத்தைத் தழுவ மக்களுக்குச் சுதந்திரம் தரப்பட்டது. ஆனால் அவ்வுடன்படிக்கையில் கால்வின் சமயத்தவர் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. பிற சமயத்தினருக்கு வழங்கப்பட்ட சலுகைகளை கால்வினியரும் கோரினர்.

2. **ஜெஸ்யூட் குருமார்களின் பணி**: பிராடஸ்டண்டு மதம் வேகமாகப் பரவுவது கண்டு கத்தோலிக்கர்கள் ஆத்திரம் அடைந்தனர். பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியன நிறுவி மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த ஜெஸ்யூட் கத்தோலிக்க பாதிரியார்கள், ஜெர்மானிய ஆலோசகர்களாகவும் பணியாற்றினர். இதைப் பயன்படுத்தி, கத்தோலிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான கிளர்ச்சியை கத்தோலிக்கர்கள் தொடங்கினர்.

3. **நாட்டின் நிலைமை**: ஐரோப்பிய நாடுகளை ஆட்சி செய்த முதலாம் ஃபெர்டினான்ட், இரண்டாம் மாக்சிமிலியன், ருடால்ஃப், மத்தியாஸ் உட்பட பல மன்னர்கள் திறமையற்றிருந்தனர். இதனால் சமய, பொருளாதார, அரசியல் நிலைமைகள் மோசமாயின. அது பின்னர் உள்நாட்டுப் போருக்கும் அயல் நாட்டவரின் தலையீட்டிற்கும் வழிவகுத்தது.

4. பிராடஸ்டண்டு சங்கம் : கத்தோலிக்கர்களின் எதிர்ப்பை சமாளிக்க, பிராடஸ்டண்டு நாடுகள் ஒன்று சேர்ந்து. 1608-ல் ஒரு ஒற்றுமைச் சங்கத்தை நிறுவின. அதற்கு கிறித்தவ மத செய்திப் பரப்புச் சங்கம் என்று பெயர். பேலடினேட் மன்னர் ஃபிரடரிக்-ஐ தலைவராகக் கொண்ட அச்சங்கத்தில் கால்வீனியக் கோட்பாடுகளைத் தழுவிய ஏராளமான நாடுகளும் தனி அரசுகளும் பங்கு பெற்றன.

5. கத்தோலிக்க சங்கம் : பிராடஸ்டண்டு சங்கம் தோற்றுவிக்கப்பட்டதை அறிந்த கத்தோலிக்கர்கள் கூடி, பவேரியா மன்னர் மாக்சிமிலியன் தலைமையில் கத்தோலிக்க சங்கத்தை, 1609-ல் ஏற்படுத்தினர். இதனால் இரு பிரிவுகளாக ஜெர்மனி பிரிந்தது.

## முப்பதாண்டு போரின் போக்கு

பொஹீமியக் கிளர்ச்சி, டேனியர்கள் தலையீடு, ஸ்வீடன் தலையீடு, பிரான்ஸ் தலையீடு என நான்கு கட்டங்களாக முப்பதாண்டுப் போர் நடைபெற்றது.

### முதல் கட்டம் : பொஹீமியக் கிளர்ச்சி (1618-25)

புனித உரோமானியப் பேரரசிலுள்ள அரசுகளில் ஒன்றான பொஹீமியாவின் மக்கள், பிராடஸ்டண்டு சமயத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய சமயச் சுதந்திரம், அரசியல் சலுகைகள் ஆகியவற்றை நீக்க பேரரசர் மத்தியாஸ் முயன்றார். எனவே கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்கள், ஃபிரடரிக்கை மன்னராக்கினர். ஆனால் மத்தியாஸுக்குப் பின் மன்னரான இரண்டாம் ஃபெர்டினான்ட், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஃபிரடரிக்கை நாட்டைவிட்டு விரட்டினார்.

ஸ்பெயினின் மன்னர் மூன்றாம் பிலிப்பின் உதவியுடனும், பவேரிய மன்னர் மாக்சிமிலியன்-ன் படைகளுடனும், கத்தோலிக்க சங்கத்தின் படைகளைக் கொண்டும் போருக்கு இரண்டாம் ஃபெர்டினான்ட் ஆயத்தமானார். அக்கூட்டுப் படைகளுக்குத் தளபதியாக தில்லி (Tilly) நியமிக்கப்பட்டார். பொஹீமியப் படைகளுக்கும் பேரரசரின் படைகளுக்கும் இடையே போர் ஏற்பட்டது. தில்லியின் தலைமையிலான கத்தோலிக்கப் படைகள், 1620-ல் ஒயிட் ஹில் (White Hill)-ல்

நடைபெற்ற போரில் ஃபிரடரிக்கைத் தோற்கடித்தன. கத்தோலிக்கப் படைகள் பொஹீமியாவைக் கொள்ளையடித்தன. பெரும்பாலானோர் கத்தோலிக்கத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டனர்; மற்றவர்கள் கொல்லப்பட்டனர்.

## இரண்டாம் கட்டம்: டேனியர்கள் தலையீடு *(1625-29)*

இரண்டாம் ஃபெர்டினாண்ட்டின் செயல்களால் பிராடஸ்டண்டுகள் பெரும் துன்பத்திற்குள்ளாயினர். அதை அறிந்த டென்மார்க் மன்னர் நான்காம் கிறிஸ்டியன், பிராடஸ்டண்டுகளுக்கு உதவ முன்வரவே, இரண்டாம் கட்டப் போர் தொடங்கியது.

ஜெர்மனி மீது *1625*-ல் நான்காம் கிறிஸ்டியன் படையெடுத்தார். பேரரசின் தளபதிகள் தில்லியும் வாலன்ஸ்டைனும் இணைந்து கிறிஸ்டியனின் படைகளை, *1626*-ல் லுட்டர் (Lutter) என்னுமிடத்தில் தோற்கடித்தனர்.

ஜெர்மனியிலிருந்து வெளியேறிய கிறிஸ்டியன், *1629*-ல் லூபக் அமைதி உடன்பாட்டில் கையொப்பமிட்டார். அதன்படி, கைப்பற்றிய கத்தோலிக்க நகரங்களை திருப்பிக் கொடுத்து விடுவதுடன் ஜெர்மானிய விவகாரங்களில் தலையிடுவதில்லை என அவர் ஒப்புக்கொண்டார்.

லூபக் அமைதிக்குப் பின் ஜெர்மானியரை வாலன்ஸ்டைன் மிகவும் துன்புறுத்தினார். எனவே வாலன்ஸ்டைனை ஃபெர்டினான்ட் பதவி நீக்கம் செய்தார். அதே ஆண்டிலேயே *(1629-ல்)* திருப்பித்தரும் ஆணையை (Edict of Restitution) அவர் வெளியிட்டார். அதன் மூலம் கடந்த *50* ஆண்டுகளில் திருச்சபையின் சொத்துக்களைக் கவர்ந்தவர்கள் அவற்றை திருப்பித் தரவேண்டும் எனப்பட்டது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிராடஸ்டண்டு அரசர்கள் ஒன்று சேர்ந்து பேரரசை எதிர்த்தனர். அதற்கு ஸ்வீடன் மன்னர் கஸ்டவஸ் அடால்ஃபஸ் ஆதரவளித்தார்.

## மூன்றாவது கட்டம் : ஸ்வீடன் தலையீடு *(1630-35)*

வாலன்ஸ்டைன் பதவி நீக்கம், கஸ்டவஸ் அடால்ஃபஸ் தலையீடு ஆகியவற்றால் முப்பதாண்டுப் போரின் மூன்றாவது கட்டம் தொடங்கியது.

ஸ்வீடனையும் பிராடஸ்டண்டு சமயத்தையும் உயர்ந்த நிலைக்கு கொண்டுவர விரும்பிய கஸ்டவஸ், கத்தோலிக்க வெற்றி, தன் அரசைக் குலைத்துவிடுமோ என்ற அச்சத்தாலும், 1630-ல் ஜெர்மனி மீது படையெடுத்தார்.

பிரெய்டன் பெல்ட் போர் : பிரெஞ்சு மன்னர் பதிமூன்றாம் லூயியின் முதலமைச்சர் ரிச்சல்யு (Richlieu) ஹாப்ஸ்பர்க் குடும்பத்தைத் தோற்கடிக்க, கஸ்டவஸ்-க்கு பணம் மற்றும் படையுதவிகளை அளித்தார். அதைக் கொண்டு, 1631-ல் பிரெய்டன்ஃபெல்ட் (Breitenfield) என்னுமிடத்தில் தில்லியை படுதோல்வியடையச் செய்தார் கஸ்டவஸ். 1632-ல் லெக் (Lech)-ஐத் தாக்கிய தில்லி, மீண்டும் தோல்வி கண்டு போரில் இறந்தார். ஜெர்மனி முழுதும் கஸ்டவஸ் கையில் விழுந்துவிடும் போல் இருந்தது. எனவே வாலன்ஸ்டைனை மீண்டும் தளபதியாக்கினார் பேரரசர் ஃபெர்டினான்ட்.

லூட்சென் போர் : 1632-ல், வாலன்ஸ்டைன் தலைமையிலான பேரரசுப் படைகளை லூட்சென் போரில் கஸ்டவஸ் அடால்ஃபஸ் வெற்றி பெற்றார். ஆனாலும் அவர் போரில் இறந்துவிட்டார். பின்னர் பெரும் வெற்றிகண்ட வாலன்ஸ்டைன், ஜெர்மானிய பிராடஸ்டண்டு அரசுகள், ஸ்வீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். இதனால் பேரரசர் ஃபெர்டினான்டால் வாலன்ஸ்டைன் கொல்லப்பட்டார்.

பிராக் உடன்படிக்கை : கஸ்டவஸ் இறந்த பிறகும் தொடர்ந்து போரிட்ட ஸ்வீடன் படைகள், 1634-ல் நார்ட்லிங்கன் (Nordlingen) என்னுடத்தில் தோற்கடிக்கப் பட்டன. 1635-ல், புனித ரோமானியப் பேரரசும் ஸ்வீடனும் பிராக் உடன்படிக்கை (Treaty of Prague) யில் கையெழுத்திட்டு போர் நிறுத்தம் செய்தன. அவ்வுடன்படிக்கையின்படி, 1629-ல் வெளியிடப்பட்ட, திருப்பித் தரும் ஆணை கைவிடப்பட்டது. இவ்வுடன்படிக்கையே கத்தோலிக்கத்தை அழிவிலிருந்து காப்பாற்றியது.

## நான்காவது கட்டம் : பிரான்ஸ் தலையீடு (1635-48)

மூன்று கட்டங்களிலும் சமயப் போராக நடைபெற்று வந்த முப்பதாண்டுப் போர், 1635-ல் அரசியல் போராக உருவெடுத்தது.

ரோக்ராய், லென்ஸ் போர்கள் : பொஹீமியப் பேரரசர் இரண்டாம் ஃபெர்டினான்ட் இறந்த பின், 1637-ல் மூன்றாம் ஃபெர்டினான்ட் பேரரசரானார். பிரான்சின் அமைச்சர் ரிச்சல்யு-விற்குப் பின் அமைச்சரான மாசரின் (Mazarin) முப்பதாண்டுப் போரில் ஈடுபட்டார். 1643-ல் ஸ்பெயினுக்குள் நுழைந்த பிரெஞ்சுப் படை, ரோக்ராய் எனுமிடத்திலும் லென்ஸ்-ல் 1648-லும் ஸ்பானியப் படைகளைத் தோற்கடித்தன.

போர் முடிவு : போர்களால் களைப்படைந்த ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் நாட்டுத் தளபதிகளும், அரசியல் நிபுணர்களும் போரை நிறுத்திக் கொண்டு அமைதி ஏற்படுத்த முன்வந்தனர்.

## வெஸ்ட்ஃபேலியா உடன்படிக்கை (1648)

அதன் விளைவாக, 1648-ல் ஏற்பட்ட வெஸ்ட்ஃபேலியா உடன்படிக்கை (Peace of Westphalia) மூலம் முப்பதாண்டுப் போர் முடிவுற்றது.

* உடன்ப்டிக்கையின் மூலம் பிரான்சிற்கு மெட்ஸ், டூல், வெர்டன் ஆகிய இடங்களும், ஸ்வீடனுக்கு மேற்கு போமரேனியா, ஓடர் ஆற்றைச் சுற்றியுள்ள பகுதி, பிரமன் நகரம் ஆகியன கிடைத்தன.

* டச்சு நெதர்லாந்து அதிகாரபூர்வமாக விடுதலை பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. புனித ரோமானியப் பேரரசில் இருந்து விடுதலை பெற்ற சுவிட்சர்லாந்து சுதந்திரம் அடைந்தது. பவேரிய மன்னர் மாக்சிமிலியனுக்கும் ஃபிரடரிக் மகனுக்கும் பாலடினேட் அளிக்கப்பட்டது.

வெஸ்ட்ஃபேலியா உடன்படிக்கையின் மூலம் ஐரோப்பிய சமயம் மற்றும் அரசியலில் சிலமாற்றங்கள் ஏற்பட்டன. அவை,

**சமய மாற்றங்கள்** : உடன்படிக்கையால் ஜெர்மனியின் சமயப் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்பட்டது. லூதரின் மறுப்புக் கொள்கை வெற்றி பெற்றது. கால்வீனிய சமயத்தினரும் லூதரின் சமயத்தினரைப் போல் எல்லா உரிமைகளையும் பெற்றனர். 1624-க்கு முன்பு கத்தோலிக்கர்களும் பிராடஸ்டண்டுகளும் வைத்திருந்த சொத்துக்கள் அவர்களிடமே திருப்பித் தரப்பட்டன. ஜெர்மனியின் மன்னர்கள், தங்கள் மக்களின் சமயத்தை தீர்மானித்துக் கொள்ளவும் வழி ஏற்பட்டது.

மக்களுக்கு சமய சுதந்திரம் அளிக்கப்பட்டது. மக்களிடையே சமய சகிப்புத்தன்மை ஏற்பட்டது. அரசு நீதிமன்றங்களில் கத்தோலிக்க நீதிபதிகளும் பிராடஸ்டண்டு நீதிபதிகளும் சமமாக இடம் பெற்றனர். குறிப்பாக, 1624-க்கு முன்பு தாம் பெற்றிருந்த எல்லா சிறப்புகளையும் பிராடஸ்டண்டுகள் பெற்றனர்.

**அரசியல் மாற்றங்கள்** : உடன்படிக்கையால் பல மன்னர்கள் சுயேச்சையாயினர். பேரரசின் அனுமதியின்றி, சண்டையிடவோ, சமாதானம் செய்து கொள்ளவோ அவ்வரசுகளுக்கு உரிமை அளிக்கப்பட்டது. வெளிநாடுகளுக்கு தூதர்களை அனுப்ப, அந்நாட்டுத் தூதர்களை தன் நாட்டுக்குள் அனுமதிக்க, சட்டங்கள் இயற்றிக்கொள்ள, நாணயம் அச்சிட அம்மன்னர்களுக்கு உரிமை உண்டு. இவற்றால் புனித உரோமானியப் பேரரசின் அதிகாரமும் செல்வாக்கும் குறைந்தன.

## முப்பதாண்டுப் போரின் விளைவுகள்

1. முப்பதாண்டுப் போரில் ஜெர்மானிய மக்கள் மூன்றில் இரண்டு பங்கினர் இறந்தனர். இதனால் ஜெர்மனி பெருமளவில் பாதிக்கப்பட்டது. மக்கள் வறுமையில் வாடினர். பிரிவினைச் சக்திகள் வலுப்பெற்று, ஐக்கிய நாடாக ஜெர்மனி மாறுவது தடுக்கப்பட்டது.

2. சக்தி மிக்க நாடாக பிரான்ஸ் வளர்ந்தது. அதன் எல்லைகள் விரிவடைந்ததால் பதினான்காம் லூயி காலத்தில் பல போர்கள் மூண்டன. இதனால் ஸ்பெயின் - பிரான்ஸ் இடையே தொடர்ந்து பல போர்கள் நடைபெற்றன.

3. பிரான்சின் படையெடுப்பிலிருந்து ஜெர்மனியைக் காக்கும் பொறுப்பு பிரான்டர்பர்க் சிற்றரசருக்குத் தரப்பட்டது. இதனால், பிற்காலத்தில் உயர்வடைந்த பிரஷ்யா, ஆஸ்திரியா, இத்தாலி, பால்கன் தீபகற்பம் ஆகியவற்றில் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றது.

4. வாரிசுரிமைப்படி பேரரசர் பதவி அளிக்கப்பட்டதால் ஹாப்ஸ்பர்குகள் முற்றிலும் முக்கியத்துவம் இழந்துவிடவில்லை. உடன்படிக்கைக்குப்பின், ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் சமமானவை என்ற கோட்பாடு வளர்ந்தது. இது தற்கால அரசுமுறை தோன்ற வழி வகுத்தது.

5. ஜெர்மானிய சிற்றரசர்கள் அவையில் ஸ்வீடன் இடம் பெற்றது. இதனால் ஸ்வீடனின் ஆதிக்கம் உயர்ந்தது.

6. கத்தோலிக்கம் , லூதரினியம், கால்வீனியம், சுவிங்லியம் ஆகியவை சமமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, சமயப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டது. முப்பதாண்டுப் போரின் முடிவில், இழந்த செல்வாக்கை ஒவ்வொரு சமயத்தினரும் மீட்டுக் கொண்டனர்.

7. முப்பதாண்டுப் போரால் மக்களிடையே மனிதாபிமானக் கருத்துக்கள் பரவின. போரில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ வசதி அளித்தல், கொலை கொள்ளை போன்ற தவறான செயல்களைத் தடுத்தல், போரில் ஈடுபடாத மக்களைக் காப்பாற்றுதல் போன்ற நல்ல கோட்பாடுகள் மக்களிடையே பரவின.

## முடிவுரை

முப்பதாண்டுப் போருக்குப் பிறகும், ஐரோப்பிய நாடுகளிடையே பல போர்கள் நடைபெற்றன. எனினும் வெஸ்ட்ஃபேலியா உடன்படிக்கைக்குப் பிறகு, கத்தோலிக்கர்களும் பிராடஸ்டண்டுகளும் ஒற்றுமையாகவே வாழ்ந்தனர். அதனால் தான், "முப்பதாண்டுப் போரே முதல் அரசியல் போரும் கடைசி சமயப் போரும் ஆகும்" எனப்படுகிறது.

# 9.நான்காம் ஹென்றி

நான்காம் ஹென்றி, ரிச்சல்யு, மாசரின், பதினான்காம் லூயி ஆகிய நால்வரும் பிரான்சின் எழுச்சிக்கும் அதன் பெயருக்கும், புகழுக்கும் காரணமானவர்கள். அவர்களுள் போர்பன் வம்ச அரசரான நான்காம் ஹென்றி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## நான்காம் ஹென்றி பட்டத்துக்கு வருதல்

பிரான்சின் போர்பன் வம்சத்தின் முதல் அரசர் நவாரேயின் ஹென்றி ஆவார். அவர், வலோய்ஸ்-ன் மூன்றாம் ஹென்றி, குய்ஸ்-ன் ஹென்றி ஆகியோருடன் சேர்ந்து செய்த சண்டைகளே மூன்று ஹென்றிக்கள் போர் (War of Three Henries - 1585 - 89) எனப்படுகிறது. குய்ஸ்-ன் ஹென்றி 1588-லும், மூன்றாம் ஹென்றி 1589-லும் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் போட்டியில்லாத நவாரேயின் ஹென்றி, 1589-ல் நான்காம் ஹென்றி என்ற பெயரில் பிரான்சின் மன்னரானார். அவருடன் பிரான்சில் போர்பன் வம்சத்தின் ஆட்சி தொடங்கியது.

## நான்காம் ஹென்றி (1589-1610) முடிசூட்டப்படுதல்

ஹென்றி ஆட்சிக்கு வந்தபோது பிரான்சின் பெரும்பான்மையான மக்கள் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றினர். ஆனால் பிராடஸ்டண்டு சமயத்தைப் பின்பற்றுபவரான நான்காம் ஹென்றியை மன்னராக பிரெஞ்சு கத்தோலிக்கர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கிடையில் பிரான்சில் பிரபுக்களிடையே சமயப் போர் நடைபெற்றதால் அமைதியற்ற நிலை இருந்தது. அப்போரில் பிரான்சின் கத்தோலிக்கர்களுக்கு ஸ்பெயினின் மன்னர் இரண்டாம் பிலிப் ஆதரவு அளித்தார். தான்

கத்தோலிக்கத்திற்கு மாறினால் மட்டுமே நாட்டில் அமைதியை ஏற்படுத்த இயலுமென எண்ணிய நான்காம் ஹென்றி, 1593-ல் கத்தோலிக்கத்திற்கு மாறினார். இதனால் பிரான்சில் பெரும்பாலான மக்கள் நான்காம் ஹென்றியை மன்னராக ஏற்றுக் கொண்டனர். 1594-ல் சார்டர்ஸ் (Charters)-ல் அவருக்கு முடிசூட்டப்பட்டது.

## ஸ்பெயினுடன் போர்

நான்காம் ஹென்றி அரியணை ஏறியவுடன் நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கும், பிரான்சின் விவகாரங்களில் அந்நிய நாடுகள் தலையிடுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்தார். இங்கிலாந்தும் நெதர்லாந்தும் ஸ்பெயினுடன் ஏற்கனவே போரிட்டுக் கொண்டிருக்கையில், 1595-ல் அந்த இரு நாடுகளுடனும் உடன்பாடு செய்து கொண்டு ஸ்பெயின் மீது போரை அறிவித்தார். ஒரே சமயத்தில் மூன்று நாடுகளுடன் போரிட முடியாத ஸ்பெயின் மன்னர் இரண்டாம் பிலிப், 1598-ல் ஹென்றியுடன் வெர்வின்ஸ் உடன்படிக்கை (Peace of Vervins) செய்து கொண்டு, பிரான்சுடனான போரை நிறுத்தினார்.

## நான்டெஸ் ஆணை (Edict of Nantes - 1598)

நான்காம் ஹென்றியின் கத்தோலிக்க மதமாற்றத்தை பிராடஸ்டண்டுகள் விரும்பவில்லை. எனவே பிராடஸ்டண்டுகளை திருப்திப்படுத்தவும், சமயப் போரை தவிர்க்கவும் 1598-ல் நான்டெஸ் ஆணையை ஹென்றி வெளியிட்டார். அவ்வாணையின்படி, ஹியூகோனாக்களுக்கு சமய சுதந்திரம் வழங்கப்பட்டது; கல்வி நிலையங்கள் நடத்த ஹியூகோனாக்கள் அனுமதிக்கப்பட்டனர்; Synod மன்றத்தில் உறுப்பினராகவும், அரசு பதவி வகிக்கவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்; ஹியூகோனோ சமயம் பற்றிய நூல் வெளியிட விதிக்கப்பட்டிருந்த தடையும் அகற்றப்பட்டது.

நான்டெஸ் ஆணையால் 50 ஆண்டுகளாக பிரான்சில் நிலவிய சமயக் குழப்பங்கள் மறைந்து அமைதி ஏற்பட்டது. ஹியூகோனாக்களின் ஒத்துழைப்பால், தொழில் வளர்ச்சியையும் செல்வ வளர்ச்சியையும் நாடு அடைந்தது. ஆனால் நான்காம் ஹென்றிக்குப் பின் வந்த பதிமூன்றாம்

லூயி, இவ்வாணையை (1685-ல்) ரத்து செய்ததால் சமயப் பூசல்கள் மீண்டும் தோன்றின.

## சல்லியின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்

உள்நாட்டுக் குழப்பங்களாலும், அயல் நாடுகளுடனான போர்களாலும் சீர்குலைந்துவிட்ட சட்டம் - ஒழுங்கையும், பொருளாதாரத்தையும் சீர்படுத்தல், தன் அதிகாரத்தை அதிகரித்தல், ஐரோப்பிய நாடுகளில் சிறந்த நாடாக பிரான்சை உயர்த்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டிருந்த நான்காம் ஹென்றிக்கு, அவற்றை செயல்படுத்துவதில் அவரது அமைச்சர் சல்லி (Sully) உறுதுணையாக இருந்தார்.

நிர்வாகத்தில் முன்அனுபவமும், திறமையும், கடமை உணர்வும் கொண்ட சல்லி, வருவாயைச் சீரமைத்து நாட்டின் நிதி நிலையைச் சீராக்கினார். உணவு உற்பத்தியிலும் பிரான்ஸ் தன்னிறைவு பெற, வேளாண்மைத் துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அரசரின் உறவினர் மற்றும் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகையைக் குறைத்தார். படை பலத்தைக் குறைத்து, நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தார். சல்லியின் இச்சீர்திருத்தங் களால் கடனிலிருந்து விடுபட்ட பிரான்சில் சேமிப்பு அதிகரித்தது.

## தொழில்கள், வர்த்தகம் மேம்பாடு

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த தொழிற் சாலைகள் நிறுவுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. பட்டு, கம்பளி, கண்ணாடி, பீங்கான், இரும்பு ஆகிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. சாலைகள் போடுதல், பாலங்கள் அமைத்தல், நதிகளில் நீர்வழிப் போக்குவரத்தை அதிகமாக்குதல் ஆகியன செய்யப்பட்டன. வாணிக வளர்ச்சிக்கும், கனடாவில் குடியேறவும் ஊக்குவிக்கப்பட்டது. வணிகர்களின் பாதுகாப்புக்கென கடற்படை நிறுவப்பட்டது.

## மன்னரின் அதிகாரத்தை மேம்படுத்தல்

பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்ததுடன், மன்னரின் அதிகாரத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி ஹென்றி செய்தார். பிரபுக்களை, நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கும்

வழக்கம் கைவிடப்பட்டது. பிரபுக்களுக்கு பதிலாக நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தோர் நிர்வாகப் பொறுப்பில் அமர்த்தப்பட்டனர். States General என்ற நாடாளுமன்றத்தைக் கூட்டாமலே ஹென்றி ஆட்சி செய்தார். இவற்றின் மூலம், மன்னரின் அதிகாரம் நிலை நாட்டப்பட்டது.

## மாபெரும் திட்டம்

ஆஸ்திரியா, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் உள்ள ஹாப்ஸ்பர்க் வம்சத்தினரின் அதிகாரத்தை நசுக்க, ஐரோப்பாவில் உள்ள பிராடஸ்டண்டு நாடுகளுடன் ஒரு கூட்டுறவை ஏற்படுத்தும் மாபெரும் திட்டத்தில் நான்காம் ஹென்றி ஈடுபட்டார். ஆனால் அத்திட்டம் ஈடேறவில்லை. இதற்கிடையில், *1610*-ல், ஒரு கத்தோலிக்கரால் ஹென்றி கொலை செய்யப்பட்டார்.

## மதிப்பீடு

பிரெஞ்சு மன்னர்களுள் சிறந்தவரான நான்காம் ஹென்றி, ஓரளவு அமைதியை ஏற்படுத்தி, பிரான்சின் வளர்ச்சிக்கு வழி வகுத்தார். பிராடஸ்டண்டுகளுக்கு சுதந்திரம் வழங்கியதன் மூலம் சமயப் போருக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்தார். அதன் மூலம் பிரான்சின் வரலாற்றில் நான்காம் ஹென்றி இடம் பெற்றார்.

# 10. பதினான்காம் லூயி

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரான்சை ஆட்சி செய்த மன்னர்களுள் சிறப்பானவர் பதினான்காம் லூயி. 1643 முதல் 1715 வரை பிரான்சின் மன்னராக இருந்த லூயி, தன் உள்நாட்டுக் கொள்கை, பொருளாதாரச் சீர்திருத்தங்கள், அயல் நாட்டுக் கொள்கை, கலை, இலக்கிய வளர்ச்சி ஆகியவற்றில் சிறப்பான வெற்றி கண்டார். அச்சாதனைகளை சற்று விரிவாகக் காண்போம்.

### லூயியின் உள்நாட்டுக் கொள்கை

ஐந்து வயதிலேயே (1643-ல் பட்டத்திற்கு வந்த பதினான்காம் லூயியின் அரசாங்கப் பொறுப்பை, முதலில் மாசரின் ஏற்று நடத்தினார். 1661-ல் மாசரின் இறந்த பிறகு, 24 வயதான லூயி தானே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தம்மையே அரசு என்று பறைசாட்டிக் கொண்ட லூயி, தானே ஆட்சி செய்யவும் முற்பட்டதால், பிரதம அமைச்சரின் பதவியின் முக்கியத்துவம் நீங்கியது.

லூயியின் சிறப்பான ஆட்சிக்கு அவருடைய திறமையான அமைச்சர்களான லூவோ (Louvis), போக்குவ (Fouquet), கோல்பர்ட் (Colbert) ஆகியோர் காரணமாவர்.

### நிர்வாகத்தை மையப்படுத்தல்

பதினான்காம் லூயி அறிவொளி சான்ற ஒரு வல்லரசர். மாசரின் இறந்த பிறகு, "எதிர்காலத்தில் நானே எனது முதலமைச்சராக இருப்பேன்" என்று அவர் பறை சாற்றினார். தன் வலிமையையும் செல்வாக்கையும் பெருக்கிக்கொள்ள, எல்லா அதிகாரங்களையும் (சட்டம் இயற்றுதல், நிர்வகித்தல், நீதி வழங்கல்) தன்னிடமே வைத்திருந்தார். States General என்ற பிரெஞ்சுப் பாராளுமன்றத்தை அவர் கூட்டவே இல்லை.

முற்போக்கு மற்றும் மக்களாட்சி நிறுவனங்கள் அனைத்தும் ஒடுக்கப்பட்டன. மாநில அவைகளும், நகரவைகளும் மைய அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. நடுத்தர மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசக் குழு (King's Council) உண்மையில் பிரான்சை ஆட்சி செய்தது.

### கோல்பர்ட்டின் சீர்திருத்தங்கள்

பதினான்காம் லூயியின் கீழ் நிதி அமைச்சராக (1661 முதல்) கோல்பர்ட் (Colbert) பணியாற்றினார். உண்மையாக உழைத்து, மன்னரிடமும் மக்களிடமும் நல்ல பெயர் பெற்ற கோல்பர்ட் செய்த சீர்திருத்தங்கள் பல. அவை,

i) நிதிச் சீர்திருத்தங்கள்: நாட்டின் வரவு - செலவை சீரமைத்தல், வரி வசூல் முறையை மாற்றியமைத்து பல ஊழல்களை ஒழித்தல், தொழில் வளர்ச்சியைப் பெருக்க

வணிகர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் பண உதவி செய்தல், வரிகளை வசூலிக்க இன்டென்டன்ட்ஸ் (Intendants) என்ற அதிகாரிகளை நியமித்தல், டெய்லே (Taile) என்ற நிலவரியைக் குறைத்தல், அதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யவும் உள்நாட்டுத் தொழில்களுக்கு ஆதரவு தரவும் காப்பு வரி விதித்தல் ஆகியவற்றை கோல்பர்ட் செய்தார். இந்நடவடிக்கைகளால், பணப் பற்றாக்குறை நீங்கி, கருவூலம் நிரம்பி வழிந்தது.

ii) பொருளாதாரச் சீர்திருத்தங்கள் : வேளாண்மை தொழில்கள், வர்த்தகம் - வாணிகம் ஆகிய துறைகளில் பல சீர்திருத்தங்களை கோல்பர்ட் கொண்டுவந்தார்.

வேளாண்மை: கடன்களை திருப்பித் தர முடியாத விவசாயிகளை துன்புறுத்தக் கூடாது என கோல்பர்ட் ஆணையிட்டார். லாங்குடாக் வாய்க்காலை நிர்மாணித்ததுடன், கரோன் நதியை மத்திய தரைக்கடலுடனும் அட்லாண்டிக் பெருங்கடலுடனும் இணைத்தார். பிற நாடுகளுக்கு தானியங்கள் ஏற்றுமதி செய்வதைத் தடை செய்து, தானியங்களின் விலைகளைக் குறைத்தார்.

தொழில்: தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க இங்கிலாந்து, ஹாலந்து, இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து கைவினைஞர்களை பிரான்சில் குடியேற்றினார். அவர்களுடைய உதவியுடன், உலோகம், கண்ணாடி, பட்டு போன்ற தொழில்களைத் தொடங்கினார். பிரெஞ்சுத் தொழில்களுக்கு பாதுகாப்பு அளிக்க அயல்நாட்டுப் பொருள்கள் மீது இறக்குமதி வரி விதித்தார். உள்நாட்டில் தடையிலா வாணிகத்தை உறுதிப்படுத்த உள்நாட்டு வரியை முடிந்தவரை குறைத்தார்.

வர்த்தகம் - வாணிகம் : வர்த்தகம் வளர்வதற்குரிய சூழ்நிலையை நாட்டில் கோல்பர்ட் உருவாக்கினார். இங்கிலாந்தின் மெர்கன்டலிசம் போன்று, கோல்பர்டிசமும் நாட்டின் செல்வம் அதிகரிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. வர்த்தகத்தை ஊக்குவிக்க, மத்திய தரைக் கடல் பகுதிகள், அமெரிக்கா, இந்தியா, பால்டிக் நாடுகள் ஆகிய பகுதிகளுடன் தொழில் தொடர்பு கொள்ள பல கம்பெனிகளை ஊக்குவித்தார். கோல்பர்ட்டின் முயற்சியால் 1664-ல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டது.

தற்காப்பிற்காகவும், வாணிக வளர்ச்சிக்காகவும் பிரான்சின் கடற்படை புதுப்பிக்கப்பட்டது. பழைய துறைமுகங்கள் புதுப்பிக்கப்பட்டன. ராக்ஃபோர்ட், கலே, பிரெஸ்ட், ஹாவ்ரே ஆகிய இடங்களில் கப்பல் கட்டும் தளங்கள் நிறுவப்பட்டன.

## லூயியின் சமயக் கொள்கை

லூயியின் எதேச்சதிகாரம் சமயத் துறையிலும் நன்கு வெளிப்பட்டது. கத்தோலிக்கரான அவர், முதலில் போப்பை எதிர்த்தார். ஆனால் பின்னர், கத்தோலிக்கக் கொள்கைகளை எதிர்த்தவர்களை அழிக்க வேண்டும் என அவர் எண்ணினார். 1682-ல், கேலிகன் சுதந்திரம் (Gallican Liberties) என்ற அறிக்கையை வெளியிட்டார். அதன்படி, "பிரான்சின் சமயத் துறையில் போப்புக்கு அதிகாரம் உண்டு; ஆனால் அரசரை பதவியிலிருந்து விலக்க போப்பிற்கு அதிகாரம் இல்லை" எனப்பட்டது.

லூயியின் ஆட்சிக் காலத்தில், இப்ரஸ் நகர மேற்றிராணியார் ஆன ஜேன்சென் என்பவரால் ஜேன்சனிஸ்ட் இயக்கம் தொடங்கப்பட்டது. கத்தோலிக்க வாழ்வில் அதிக கட்டுப்பாடும் தூய்மையும் இருக்க வேண்டுமென்பதே அவ்வியக்கத்தவரின் கோட்பாடு. அவ்வியக்கத்தினரை லூயி துன்புறுத்தினார்.

ஹியூகோனாக்களுக்கு பல இன்னல்களை லூயி ஏற்படுத்தினார். அவர்களது வழிபாட்டிடங்களை இடித்ததுடன் அவர்களது சொத்துக்களை பறிமுதல் செய்தார். ஹியூகோனாக்கள் அனுபவித்து வந்த சமய உரிமைகளை, நான்டெஸ் ஆணையை ரத்து (1685) செய்ததன் மூலம் லூயி ரத்து செய்தார். லூயியின் சமயக் கொள்கையில் மேடம் மெயின்டனான் என்ற பெண்ணுக்கும் அதிக பங்கு இருந்ததாம்.

## லூயியின் அயல் நாட்டுக் கொள்கை

ஐரோப்பாவிலேயே வலிமையான நாடாக பிரான்சை ஆக்க வேண்டுமென லூயி விரும்பினார். அதற்காக ஆக்கிரமிப்புக் கொள்கையை அவர் பின்பற்றினார். நாட்டின் எல்லை, வடக்கிலும் கிழக்கிலும் ரைன் நதி வரையிலும், தென்

கிழக்கில் ஆல்ப்ஸ் மலைகள் வரையிலும், தெற்கில் பிரன்னீஸ் வரையிலும் பரவியிருக்க வேண்டுமென அவர் விரும்பினார். அதற்காக, தன் வாழ்நாளில் பெரும்பகுதியை போர்க்களங்களில் லூயி கழித்தார். அவருடைய ஆக்கிரமிப்பு அளவு கடந்ததாக இருந்ததால், மற்ற ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து அவரை எதிர்த்தன.

## ஸ்பானிய நெதர்லாந்துடன் போர் (1667-68)

ஸ்பெயின் நாட்டு இளவரசி மரிய தெரசாவை மணம் செய்து கொள்தற்காக, பதினான்காம் லூயிக்கு பெருந்தொகையைத் தருவதாக ஸ்பெயின் அரசர் வாக்களித்திருந்தார். அதற்கு பதிலாக, ஸ்பெயின் அரசுக்கு வாரிசு கோரமாட்டேன் என லூயி கூறியிருந்தார் ஆனால் அத்தொகையை ஸ்பெயின் அரசரால் தர முடியவில்லை. அதைக் காரணம் காட்டி 'ஸ்பெயின் மன்னர் நான்காம் பிலிப் இறந்ததும், நெதர்லாந்தின் ஒரு பகுதியை தன் மனைவியின் பாகமாக லூயி கோரினார். அதற்கு ஸ்பெயின் ஒப்புக் கொள்ளாததால்' 1667-ல் லூயியின் முதல் போர் நடவடிக்கை துவங்கியது. அதை ஸ்பானிய - நெதர்லாந்து போர் என்றும் வாரிசுரிமை மாற்றம் போர் (war of Devolution) என்றும் குறிப்பிடுகின்றனர்.

விரைவில் நெதர்லாந்தைச் சுற்றியுள்ள சிறு நகரங்களையும் பிரெஞ்ச் காம்டே பகுதியையும் லூயி கைப்பற்றினார். லூயியின் வளர்ச்சியால், ஐரோப்பாவின் வல்லமைச் சமநிலை பாதிப்புக்குள்ளாகும் என அஞ்சிய இங்கிலாந்து, ஹாலாந்து, ஸ்வீடன் ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து, 1668-ல் முக்கூட்டு (Triple Alliance) ஒன்றை ஏற்படுத்தின. இதை அறிந்த லூயி, எய்-லா-ஷெஃபேல் உடன்படிக்கை (Treaty of Aix-la-Chapelle-1668) செய்து கொண்டு போரை முடித்துக் கொண்டார். அதன்படி, "ஸ்பானிய நெதர்லாந்தில் லூயி கைப்பற்றிய சிறு நகரங்களை மட்டும் வைத்துக் கொண்டு, பிரெஞ்சு காம்டே-ஐ திருப்பி லூயி தந்துவிட வேண்டும்" என முடிவாயிற்று.

## டச்சுப் போர் (1672-78)

ஸ்பானிய நெதர்லாந்து (பெல்ஜியம்) போரில், தன் ஆக்கிரமிப்பை தடுத்துவிட்ட ஹாலந்து மீது லூயி ஆத்திரம்

கொண்டிருந்தார். ஹாலந்தை தனிமைப்படுத்துவதற்காக, இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் - உடன், டோவர் நகரத்தில் 1670-ல் ஒரு ரகசிய உடன்பாட்டை லூயி செய்து கொண்டார். அதுவே டோவர் ரகசிய உடன்படிக்கை எனப்பட்டது. அதன்படி அவசியம் ஏற்படும் போது, லூயியுடன் சேர்ந்து கொள்ள இங்கிலாந்து மன்னர் ஒப்புக்கொண்டார். மற்றொரு தனி உடன்படிக்கையின் மூலம், ஸ்வீடனையும் தன்னுடன் லூயி சேர்த்துக் கொண்டார்.

முக்கூட்டிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட ஹாலந்து மீது 1672-ல், லூயி போர் தொடுத்தார். ரைன் நதியைக் கடந்து தெற்கு ஹாலந்தை அவர் எளிதாகக் கைப்பற்றினார். கடைசி கட்டத்தில் ஹாலந்துக்கு ஜெர்மனி அரசர் ஆரஞ்சு வில்லியம் உதவினார். நெருக்கடியான அந்த நேரத்தில், லூயியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி, ஹாலந்துக்கு இங்கிலாந்தும், ஸ்பெயினும் உதவின.

எனவே ஆறு ஆண்டு போர் நடவடிக்கைக்குப் பிறகு, 1678-ல், ஹாலந்துடன் நிமகுவன் சமாதானத்தை (Peace of Nimaguan) லூயி செய்து கொண்டார். அதன்படி, பிரான்சின் வட எல்லையில் இருந்த சில இடங்கள், ஸ்பெயினின் கிழக்கு எல்லையில் இருந்த பிரெஞ்சு - காம்டே, நடுநிலைக் குழுவின் மூலமாக ஆல்சேஸ், ஸ்ட்ராஸ்பர்க், லக்சம்பர்க் ஆகியவை லூயிக்குக் கிடைத்தன. லூயி கைப்பற்றிய தெற்கு ஹாலந்து பகுதி, ஹாலந்திற்கே திருப்பித் தரப்பட்டது.

நிமகுவன் உடன்படிக்கையால், ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக, பிரான்ஸ் - ஸ்பெயின் இடையே நடைபெற்ற போர்கள் ஓய்ந்தன.

## ஆக்ஸ்பர்க் கழகப் போர் (1688-97)

பிராடஸ்டண்டுகளை லூயி கொடுமைப்படுத்துவதைக் கண்ட ஐரோப்பிய பிராடஸ்டண்டு நாடுகள் (ஸ்வீடன், ஸ்பெயின், சில ஜெர்மானிய மாநிலங்கள், ஹாலந்து, சவாய்) புனிதப் பேரரசர் ஃபிரடெரிக் வில்லியம் தலைமையில் கூடி பிரான்சை எதிர்க்க முன் வந்தன். இவ்வாறு 1686-ல் உருவானதே ஆக்ஸ்பர்க் லீக் (League of Augsburg) எனப்பட்டது. லீக் நாடுகள், 1688-ல், பிரான்ஸ் மீது தொடுத்த போரே,

ஆக்ஸ்பர்க் லீக் போர் (War of the League of Augsburg) எனப்பட்டது. யாருக்கும் வெற்றி, தோல்வி இன்றி, ஒன்பது ஆண்டுகளுக்கு போர் தொடர்ந்தது. பின்னர் 1697-ல் ஏற்பட்ட ரிஸ்விக் உடன்படிக்கை (Treaty of Ryswick) மூலம் போர் முடிவுற்றது.

ரிஸ்விக் உடன்படிக்கையின் மூலம், தான் கைப்பற்றிய அனைத்து பகுதிகளையும் (ஸ்ட்ராஸ்பர்க் தவிர) அவரவர்களுக்கு லூயி திருப்பித் தந்தார். மூன்றாம் வில்லியமை இங்கிலாந்தின் அரசர் என லூயி ஏற்றுக் கொண்டார். ஆனால் உடன்படிக்கையின்படி லூயி நடந்து கொள்ளவில்லை.

## ஸ்பானிய வாரிசுரிமைப் போர் (1702-13)

நோய்வாய்ப்பட்டு 1700-ல் இறந்த ஸ்பெயின் அரசர் இரண்டாம் சார்லஸுக்கு குழந்தைகளே இல்லை. ஆனால் மரிய தெரசா, மார்கரட் தெரசா என்ற இரு சகோதரிகள் இருந்தனர். அவர்களை விட்டு விட்டு, லூயியின் பேரன் ஆஞ்சோ கோமகன் பிலிப், ஸ்பெயினின் பட்டத்தை ஏற்க வேண்டுமென இரண்டாம் சார்லஸ் உயில் எழுதி வைத்திருந்தார். இதனால் பிரான்சின் அரசரான தானே ஸ்பெயினுக்கும் அரசர் என லூயி கூறிக் கொண்டார்.

ஆனால் ஸ்பெயினும் பிரான்சும் லூயியின் ஆதிக்கத்தில் வந்தால் லூயியின் ஆதிக்கம் அதிகமாகிவிடும் என மற்ற ஐரோப்பிய நாடுகள் அஞ்சின. இதற்கிடையில் ஆஞ்சோ கோமகன் பிலிப், ஐந்தாம் பிலிப் என்ற பெயரில் ஸ்பெயினின் மன்னரானார். பதினான்காம் லூயியின் ஆதிக்கம் பரவுவதைத் தடுக்க, ஹாலந்து, ஜெர்மனி, சவாய், போர்ச்சுகல், பிரான்டன்பர்க், இங்கிலாந்து ஆகியன இணைந்து, 1701-ல், பெரிய கூட்டணியை உருவாக்கின. ஆர்ச் டியூக் சார்லஸை ஸ்பெயின் மன்னராக்க கூட்டணி நாடுகள் விரும்பின. கூட்டணி நாடுகள், 1702-ல் பிரான்ஸ் மீது போர் தொடுத்தன. அதுவே ஸ்பானிய வாரிசுரிமைப் போர் எனப்பட்டது.

ஐரோப்பா, அமெரிக்கா, அட்லாண்டிக் மற்றும் மத்திய தரைக் கடல் பகுதிகளிலும், இந்தியாவிலும் கூட ஸ்பானிய வாரிசுமைப் போர் நடைபெற்றது. ஆங்கிலத் தளபதி

மால்பரோ டியூக் (Duke of Marlborough)கும் சவாய்-ன் தளபதி யூஜீன் (Eugene)ம் கூட்டணிப் படைகளுக்குத் தலைமை தாங்கினர். ராமிலெஸ் *(1706)*, ஆடுநார்டே *(1708)*, மால்பிளாகேட் *(1709)* ஆகிய போர்களில் பிரெஞ்சுப் படையை மால்பரோ தோற்கடித்தார். போர்த் தோல்விகளால் நிலைகுலைந்த பதினான்காம் லூயி, எவ்வாறேனும் உடன்படிக்கை ஏற்பட்டால் போதும் என நினைத்தார்.

*1713*-ல் ஏற்பட்ட உட்ரெக்ட் உடன்படிக்கையின் மூலம், ஸ்பானிய வாரிசுரிமைப் போர் முடிவுற்றது. உட்ரெக்ட் உடன்படிக்கையின்படி,

1. ஐந்தாம் பிலிப்பை ஸ்பெயின் அரசராக அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொள்ளும். ஆனால் பிரெஞ்சு அரியணைக்கு அவர் உரிமை கோர முடியாது.
2. ஸ்பானிய நெதர்லாந்து, மிலான், சார்டினியா, நேபிள்ஸ் ஆகிய பகுதிகளை ஆஸ்திரியா பெற்றது.
3. இங்கிலாந்தின் அரசர்களாக பிராட்டஸ்டண்டுகள் ஆவதை லூயி ஏற்றுக் கொண்டார்.
4. நியூஃபவுண்ட்லாந்து, நோவாஸ்கோசியா, ஹட்சன் வளைகுடா ஆகியவற்றை பிரான்சிடமிருந்தும், மினோர்கா, ஜிப்ரால்டர் ஆகியவற்றை ஸ்பெயினிடமிருந்தும் இங்கிலாந்து பெற்றது.
5. ஸ்பானியக் காலனிகளுடன் அடிமை வாணிகம் செய்ய இங்கிலாந்துக்கு உரிமை தரப்பட்டது.
6. பிராண்டன்பர்க்-ன் தேர்வாளர், பிரஷ்யாவின் அரசராக ஏற்கப்பட்டார்.

லூயியின் ஆதிக்க ஆசையை உட்ரெக்ட் உடன்படிக்கை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால், அதே சமயம், பெரிய நாடாக இங்கிலாந்து உயர்ந்தது.

## லூயி கால கலை, இலக்கிய, விஞ்ஞான வளர்ச்சி

லூயியின் கலைத் தொண்டால், அவரது தோல்விகளையும் கூட மக்கள் மறந்துவிட்டனர். நாட்டிலுள்ள கலைஞர்களை, Academy எனும் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களது நிலையை லூயி

உயர்த்தினார். விஞ்ஞான அகாடமி, இசை அகாடமி, கல்வெட்டுக்கள் மற்றும் பதக்கங்கள் அகாடமி என்ற மூன்று அகாடமிக்களை கோல்பர்ட் நிறுவினார். அறிஞர் வெளியீடு (Journal des Savants) என்ற பத்திரிகையை விஞ்ஞான அகாடமி வெளியிட்டது.

மொழி அறிஞர்களான மொலியர், ரசீன், கோர்னீஸ்; எழுத்தாளர்கள் லா ஃபோன்டேயன், டெ செவிக்னி, லா ரோஷ் ஃபுகால்டு; பேச்சாளர்கள் போஎ, பெனலன்; லெவோ, பெரால்ட், மன்சார்ட் போன்ற கட்டிடக் கலைஞர்கள்; ஓவியர் லெ புருன்; தத்துவ அறிஞர் டெஸ்கார்டஸ் ஆகியோர் லூயி காலத்தில் வாழ்ந்தனர்.

பதினான்காம் லூயியின் காலத்தை பெரும் நூற்றாண்டு (Great Century) என்றும் அவரது கலைப் பாணியை பெரும் பாணி (Great style) என்றும் பிரெஞ்சு வரலாறு குறிப்பிடுகிறது. அவரால் கட்டப்பட்ட வெர்சேல்ஸ் அரண்மனை, அரசர் நூல் நிலையம் (பாரிசில்), அரசர் தோட்டம், அரசர் வானியல் நிலையம் (Royal Observatory) ஆகியன குறிப்பிடத்தக்கவை. இவைகளைக் கண்டு களித்த மக்கள் அவரை, சூரிய அரசர் (Sun King) என்று குறிப்பிட்டனர்.

கலை, இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய மூன்றிலும் லூயி காலம் சிறந்திருந்து. இத்துறைகளில் பிரான்சின் பாணியை பிற நாடுகளும் பின்பற்றன.

## மதிப்பீடு

பதினான்காம் லூயியின் 72 ஆண்டு கால ஆட்சி, "பிரான்சை ஐரோப்பிய நாகரிகத்தின் தலைவி" ஆக்கியது. ஆனால் செலவு மிக்க அவரது போர்கள் அவருடைய காலத்தின் கம்பீரத்தை மாசுபடுத்தின. வாழ்நாள் முழுவதும் போரிட்ட அவர், "இனி எந்த பிரெஞ்சு அரசரும் போரிடக்கூடாது" என்று அறிவுரை கூறிவிட்டு 1715-ல் இறந்தார்.

## பதினான்காம் லூயியின் வாரிசுகள்

1715-ல் இறந்த பதினான்காம் லூயிக்குப் பிறகு, அவரது கொள்ளுப் பேரனான (Great Grandson) ஐந்து வயது

பதினைந்தாம் லூயி, பிரான்சின் மன்னரானார். அவருக்கு ஆர்லியன்ஸின் டியூக்கான பிலிப் பகர ஆளுநராக இருந்தார். ஒவ்வொரு துறையையும் நிர்வகிக்க என ஏழு சபைகளை (Seven Councils) பிலிப் உருவாக்கினார்.

ஜான் லா என்ற ஸ்காட்டியர் *1716*-ல் நிறுவிய வங்கி, *1718*-ல் ஸ்டேட் வங்கியாக உயர்ந்தது. வாணிக வளர்ச்சிக்காக *1717*-ல் மேற்குக் கம்பெனி (Company of the West) நிறுவப்பட்டது. போலிஷ் வாரிசுரிமைப் போர் *(1722-35)*, ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் *(1740-48)*, ஏழாண்டுப் போர் ஆகியவை பதினைந்தாம் லூயியின் ஆட்சியின் போது நடைபெற்ற போர்களாகும்.

மேடம் டி பாம்படௌர், மேடம் டி பாரி என்ற பெண்மணிகளின் கைப்பாவையாக இருந்த பதினைந்தாம் லூயி, *1715* முதல் *1774* வரை பிரான்சின் மன்னராக இருந்தார். "எனக்குப் பிறகு அழிவு" (After me, the deluge) என்ற வார்த்தைகளைக் கூறிய லூயி, மிக ஆடம்பரமாக வாழ்ந்து விட்டு *1774*-ல் இறந்தார்.

அவரைத் தொடர்ந்து பிரான்சின் மன்னரான அவரது பேரன் பதினாறாம் லூயி, *1774* முதல் *1792* வரை ஆட்சி செய்தார். மோசமடைந்துவிட்ட பிரெஞ்சு பொருளாதாரத்தை சீர் செய்ய அவர் முயன்றார். வரியைக் கூட்ட இதுவரை கூட்டப்படாமல் இருந்த ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற பிரெஞ்சு பாராளுமன்றத்தை அவர் கூட்டினார். ஸ்டேட்ஸ் ஜெனரல் கூடியதுடன், பிரெஞ்சுப் புரட்சியும் *(1789ல்)* தொடங்கியது. அப்புரட்சியில் கில்லடின்-ல் தலை வெட்டப்பட்டு *(1792-ல்)* பதினாறாம் லூர்யி இறந்தார்.